உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# சைவம்.


| மலர் | துன்மதி௵ பங்குனிமீ | இதழ் |
| --- | --- | --- |
| 7 | 1922௵ மார்ச்சுமீ | 12 |


## இருக்கம் - ஆதிமூல முதலியார் சரித்திரம்

திருவாக்குஞ் செய்கருமங் கைகூட்டுஞ் செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கும்—உருவாக்கும்
ஆதலால் வானோரு மானைமுகத் தானைக்
காதலாற் கூப்புவர்தங் கை.

இருக்கம் ஆதிமூல முதலியார் (1866-௵) ருத்திரோத்காரி-௵ பங்குனிமீ 28உ சென்னை திருமயிலையையடுத்த இராயப்பேட்டையில் பிறந்தனர். இவர் தந்தை கனகசபை முதலியார்; தாயார் சொக்கம்மாள். இவர் தாய்மரபு தந்தைமரபு ஆகிய மரபிரண்டும் சைவநெறி வழிவந்த மாண்புக்கியைய தமது இளமையிலிருந்தே சிவபுண்ணியத்தில் விருப்பும் உழைப்பு முடையவராயிருந்து வருகின்றார். இவர் கல்வி பயிலத் தொடங்கி முதலில் தெலுங்கு பிரதம பாடசாலையிற்படித்து அப்பாடசாலையில் முதன் மாணாக்கராயிருந்தனர். அதன்பின் இவர்பிதா இவருக்குத் தமிழில் முதற்பாட புத்தகம் சொல்லிக்கொடுத்தார். அதுமுதல் இவர் தமக்கு வேறொருவர் கற்பிப்பாரின்றியே தாமே தமக்குத் தற்செயலாகக் கிடைத்த சைவ நூல்களைப் படித்து, உயர்தர வகுப்புப் பாடசாலைகளில் தமது வகுப்பு மாணாக்கரியாவரினும் தமிழில் மேம்பட்டிருந்தனர். இவர் தமிழ்ப்புலமை விரும்பிப் படிக்கவில்லை. ஆன்மார்த்தமாக இயன்றவரையில் சமய நூல்களை மாத்திரம் வாசித்தனர். இவருக்குத் தமிழ்ப்பாஷையிலுள்ள ஞானத்தையும் ஒழுக்கத்தையும் அறிந்து பாடசாலை யதிகாரிகள், தமிழ்ப்பண்டிதர்களில்லாத காலங்களில்

இவரையே தமிழ் உபாத்தியாயராக நியமித்ததுண்டு. அப்போது இவர் பிள்ளைகளுக்குத் தமிழின் அருமையை எடுத்துக்கூறி கடவுட்பத்தியை விளக்கும் சரித்திரங்களைச் சொல்லி அவர்களைத் தம் வசப்படுத்துவர். இவர் தெலுங்கை அனுதாவு செய்து தமிழைப்போற்றி வருவதை யறிந்த தலைமை உபாத்தியாயரொருவர் ஒருநாள் விளையாட்டாக இவர் வகுப்பு மாணுக்கர்களை நோக்கி "தமிழ் பெரிதோ தெலுங்கு பெரிதோ" என்று வினவினர். அப்போது தெலுங்கு மாணுக்கனொருவன் மிகவும் அவசரமாயெழுந்து "தெலுகுதேட்ட அரவம் அத்வானம்" என்ருன். அதைக்கேட்ட ஏனைய தெலுங்கு மாணுக்கர்கள் சந்தோஷித்துக் கலகலவென்று சிரித்தார்கள். இவர் உடனே யெழுந்து "தமிழ் தங்கம் வடுகு வல்லக்காடு" என்ருர். அதைக்கேட்டுத் தமிழ் மாணுக்கர் களியாவரும் சந்தோஷித்துச் சிரித்தார்கள். அப்போது இவர் தமிழின் பெருமையையும், தமிழில் தேவாரம் இல்லாதிருந்தால் தெலுங்கரி யாவரும் சமணராயிருக்க நேரிட்டிருக்கு மென்பதையும், தமிழிலிருக்கும் நாலாயிரப் பிரபந்த முதலிய நூல்களையும் திருக்குறளையும் தெலுங்கர் தெலுங்கு எழுத்தில் அச்சிட்டும் மொழிபெயர்த்தும் அனுபவித்தலையும் எடுத்து விளக்கினர். இவர் பாடசாலையில் ஒரு ஐயங்கார் தமிழ்ப்பண்டிதராயிருந்தார். அவர் இவர் சைவப்பற்றுடையரா யிருத்தலால் தமிழ்ப்பாடம் கற்பிக்குங் காலங்களில் நாராயணனே பரம்பொருளென்று கூறிச்சிவதுஷணம் செய்வர். அதை இவர் தாக்ஷிணியமின்றிக் கண்டித்துச் சிவமே பரம்பொருளென்று சாதிப்பார். ஆனல் அவரைப்போல் மத துஷணமாவது விஷ்ணு தூஷணமாவது செய்வதில்லை. இவைபோன்ற செய்கைகளால் இவரிடத்தில் பாடசாலையில் எல்லோர்க்குமே பொதுவகையாக நன்கு மதிப்பிருந்தது. அப்பண்டிதர் ஒரு தமிழ்ப் பாஷாபிமானி. அவர் "பால திராவிடபோதினி சபை" எனப்பெயரிய ஒரு சபையைத் தாபித்துச் சிறுவர்களைச் சேர்த்து உபந்நியாசங்கள் செய்வித்துக் கொண்டிருந்தனர். அச்சபையில் இவரும் சில நாள் பழகி, இலக்கிய இலக்கண நூல்களை மாத்திரம் கற்பது போதாதென்பதையும் இவற்ருேடு சமய நூல்களையும் கற்பது அவசியமென்பதையும் அடிக்கடி வற்புறுத்தி வந்தனர். அதன்பின் "பால ஞான போதினி சபை" யென்னும் ஒரு சபை தாபித்துத் தமது தோழர்களையும் இதர சிறுவர்களையும் கூட்டிச் சமயசம்பந்தமான உபந்நியாசங்கள் நடத்துவித்தனர். பாடசாலையில் கல்வி பயில்வதைவிட்ட பிறகு "ஹிந்து மதாபிமான சபை" என்னும் ஒரு சபை வைத்து மகாஜனக்கூட்டங்கள் கூட்டியும், வீதிப்பிரசங்கங்கள்செய்தும் கிறிஸ்துசமயத்தின்கோட்பாடு

களையும் வைதிக சமயங்களின் ஏற்றத்தையும், கிறிஸ்தவர்கள் செய்யும் முயற்சிகளையும், அம்முயற்சிகளால் இத்தேசத்தவர் எண்ணிறந்தோர் தனித்தனியாகவும், கூட்டங் கூட்டமாகவும், கிராமங்கிராமமாகவும் கிறிஸ்தவர்களாதலையும், அதைப் பார்த்துக்கொண்டு இத்தேசத்து வைதிக சமயிகள் வாளாவிருத்தலையும் எங்கேரமும் எடுத்தெடுத்து விளக்கிக் கொண்டிருந்தனர்.

இவர் உத்தியோகத்தில் அமர்ந்தவுடன் திருமயிலையில் வருடந் தோறும் பங்குனிமாதத்தில் நடைபெற்றுவரும் பிரமோற்சவ காலத்தில் அறுபத்துமூவர் மகோற்சவம் என வழங்கும் எட்டா நாள் திருவிழா வைத் தரிசிக்கச் சென்றபோது, நமது சைவ மகாசமய உண்மைகளைத் தங்கள் ஒழுக்கத்தால் விளக்கி உலகை வாழ்விக்கத் திருவவதாரஞ் செய்தருளிய உண்மை நாயன்மார்களின் மகோற்சவம் அவர்களின் தெரிவரும் பெருமைக்கேற்றவாறு சிறப்பாக நடைபெறாமை கண்ணுற்று வருந்தி, அதனைச் சிறப்பிக்க விரும்பி, அத்தேவஸ்தான தருமகர்த்தரோடு யோசித்து, நாயன்மார்கள் எழுந்தருளுவதற்கென பதினாறு திவ்விய விமானங்களும், அவைகளுக்கு வேண்டிய ஆயக் கால்கள் தண்டுக்கோல்கள் முதலியனவும் செய்து கொடுத்தனர். அக் கைங்கரியத்தை இவர் தொடங்கியபோது இவருக்கு வருவாய் மிகவும் குறைவாயிருந்தமையால் காலைமாலைகளில் சிறுவர்களுக்குக் கல்வி கற்பித்து அதனால் கிடைத்த ஊதியத்தைக்கொண்டு மிகவும் பிரயாசை யோடு அச்சிவ கைங்கரியத்தைச் செய்து வருவாராயினர். இவர் அவ்வாறு செய்து வந்தமையை ஸ்ரீமான் எழும்பூர் மதுரைநாயக முதலியார் என்னும் சிவநேய ரொருவர் அறிந்து, இவரைச் சில தன வான்களிடம் அழைத்துச்சென்று பொருள் சேகரித்துக் கொடுத்தனர். அச்சமயத்தில் ஒட்டகமண்ட் என வழங்கும் உதக மண்டலத்தில் சங்கிலி மேஸ்திரி யென்னும் சிவநேயரொருவர் தமக்கு நெடுங்கால மாகப் புத்திரப்பேறின்றி வருந்தி, அது பெறவேண்டி, விநாயகப் பிரதிட்டை செய்தும், பல பிரார்த்தனைகள் செய்து கொண்டும் விரதங்களை யநுட்டித்துக்கொண்டும் இருந்தனர். அவர் இவரை யறிந்திருந்தமையால் அவருக்கு இவர் கடிதம் எழுதி நாயன்மார்களின் விமானங்களைச் செய்தற்குப் பொருளுதவி செய்யும்படி கேட்டனர். உடனே அச்சிவநேயர் இவருக்கொரு கடிதம் எழுதி அதில் "எனக்கு வெகுகாலம் புத்திரசந்தான மில்லாமலிருப்பதால் பலவிதமான வைத் தியம் விரதம் பிரார்த்தனைகள் எவ்வளவோ செய்தும் பிரயோசனப்பட வில்லை. ஆகையால் இவ்வருஷம் புத்திரசந்தானம் உதித்தால் வருகிற

பங்குனி மாதத்தில் பாக்கியாயிருக்கிற விமானங்களை முழுவதும் நானே செய்து வைக்கிறதாக தங்களைக்கொண்டு பிரார்த்தித்துக் கொள்ள வேண்டுமென்று எண்ணியிருந்தேன். மறுபடி எப்படியானு லும் ஆகட்டும், இவ்வருஷத்திலேயே முடிக்கலாமென்று யோசித் திருக்கிறேன். * * * * * * என்னுடைய சந்தான குறைவைப்பற்றி தங்கள் ஆசீர்வாதமும் 63 நாயன்மார்கள் மாணிக்கவாசக சுவாமிகளின் திருவருளும் உண்டாகவேண்டுமென்று பிரார்த்திக்கிறேன்" என்று தெரிவித்தார். இவர் அக்கடிதம் கிடைத் ததும் தமது மனோரதம் நிறைவேறிற்றென்று களிகூர்ந்து உடனே அவருக்குப் பதிலெழுதி, அறுபான்மூம்மை நாயன்மார்களிடம் பத்தி பூண்டொழுகுவோர்க்குப் புத்திரசந்தானத்தோடு சகல போகபாக்கியங் களும் உண்டாவது திண்ணமாதலால் அவர் விரும்பியவாறே புத்திரப் பேறுண்டாவது திண்ணமாமென்று தெரிவித்தனர். இவர் எழுதியதை விசுவசித்து அவர் உடனே பெருந்தொகை யனுப்பியும், தமது பந்து சனங்களைக்கொண்டு பொருளுதவி செய்வித்தும் அவ்வருடத்திலேயே விமான கைங்கரியத்தைப் பூர்த்தி செய்வித்தனர். நாயன்மார் திருவரு ளால் அவ்வருட முதலாகவே அவருக்குப் புத்திரப்பேறுண்டாகத் தலைப் பட்டது. அவர் அதனால் களிகூர்ந்து பந்துக்கள் சகிதமாகச் சென் னைக்கு வந்து தமக்குப் புத்திரப்பேறருளிய நாயன்மார்களின் மகோற் சவத்தைத் தரிசித்து அதுமுதல் இவரைப் பின்னும் அதிகமாக விசு வசித்து, சென்னைச் சிவனடியார் திருக்கூட்டத்தினருள் ஒருவராயிருந்த னர். அவருடைய சகோதரர் ம-ா-ா-ஸ்ரீ கோ. ஆறுமுக மேஸ்திரி யவர்களும், குமாரர் கணேச மேஸ்திரியவர்களும் இன்றைக்கும் சென்னைச் சிவனடியார் திருக்கூட்டத்திலிருந்து பொருளுதவிசெய்கிறார் கள். இக்கைங்கரியம் (1894-95-96) விஜய ஜய, மன்மத என்னும் மூன்று வருடங்களில் நடைபெற்றன. இதன் பொருட்டு நேரிட்ட செலவு ரூபா 682. இதற்கு வரவு செலவுக் கணக்கு அச்சிட்டு வெளி யிடப்பட்டதன்றி பொருளுதவி செய்தவர்களின் பெயர்கள் விமானங் களில் செதுக்கி எழுதப்பட்டுள்ளன. அது முதல் இவர் இம்மகோற் சவகாலத்தில் தண்ணீர்ப்பந்தர் வைத்து வருகிறார். இந்த மகோற்சவம் முன்னிலும் மிகவும் சிறப்பாய் நடைபெற்று வருகின்றது. திருமயிலை யில் அறுபத்துமூவர் மகோற்சவத்தில் ஸ்ரீ கபாலீச்சர மமர்ந்தார் கற்பக வல்லி யம்மையார் சமேதராய் ஸ்கந்த கணேச சண்டேசர்களோடும் நாயன்மார்களோடும் எழுந்தருளுங் காட்சி திருக்கைலாயக் காட்சியே யென்று சொல்லவேண்டும்.

இவர் மூர்க்கநாயனர் வாசஸ்தானமாகிய திருவேற்காட்டில் வருடந்தோறும் சித்திரை மாதத்தில் நடைபெற்று வரும் திருவூறல் மகோற்சவ காலத்தில் சென்று கூடும் சிவ நேயர்களுக்குத் தண்ணீர்ப்பந்தர் முதலிய வசதிகள் இல்லாக்குறைவை யறிந்து 1897-வது வருட முதல் அவ்விடத்தில் தண்ணீர்ப்பந்தர் வைத்து நீரும் மோரும் சித்திரான்ன முதலியனவும் வழங்கிவந்தனர்.

இவர் கலியுகம் ஐயாயிரத்தில் விளம்பிஞூ கார்த்திகைமீ அமாவாசைத் திதியில் தமது வாசஸ்தானமாகிய சென்னையினின்றும் புறப்பட்டுத் திருவொற்றியூரை யடைந்து ஸ்ரீ தியாகராஜப் பெருமானுடைய பவனி மகோற்சவத்தைத் தரிசித்தபோது, அத்தலத்து மேலண்டை மாடவீதி யெங்கும் பூண்டுகள் நெருங்கி முளைத்து, அடியவர்களின் திருவடிகளிற் சிக்குண்டு, வழிபாட்டிற்கு இடையூறு விளைத்தமையைக் கண்டனர். காண்டலும், "இப்பூண்டுகள் முற்பிறவியில் சிவனடியார்களின் தெய்வ வழிபாட்டிற்கும், சைவாபிமானிகளின் சைவசமய பரிபாலனத்திற்கும் இடையூறு செய்த பாவிகளே போலும்! ஓரறிவுயிர்களாய்ப் பிறந்தும் இவை அப்பாவத்தொழிலையே செய்து கொண்டிருக்கின்றன. இவைகளை உழவாரத்திருப்பணியாற் களைதல் வேண்டும்" என்னும் எண்ணம் இவர் உள்ளத்தில் உதித்தது. உதித்தலும், இவ்வெண்ணத்தோடு இறைவனார் திருநடனத்தைத் தரிசித்து மீண்டு சென்னைமாநகரை யடைந்து, தமது கருத்தைத் தமது தோழர்களாகிய சிவனடியார்கள் சிலர்க்கு அறிவித்து, அச்சிவனடியார்களுந் தாமுமாக உழவாரத் திருப்படை மண்வெட்டி கட்டப்பாறை முதலிய ஆயுதங்களை யெடுத்துக்கொண்டு, அடுத்த மார்கழிமீ 11உ (24-12-98) சனிவார மாலை திருவொற்றியூரை யடைந்து, திருக்கோயில் வழிபாடு செய்தனர். மறுநாளாகிய ஆதிவாரத்தன்று இவர்களியாவரும் அநுட்டானபரராய், திருவீதி மகோற்சவங் கொண்டெழுந்தருளிய ஸ்ரீ மாணிக்கவாசக சுவாமிகளுக்குப் பின் திருவெம்பாவை பாராயணஞ் செய்த வண்ணம் திருவீதி வலம் வந்து திருக்கோயிலுட் புகுந்து சிவ தரிசனம் செய்து, பிறகு உழவாரத்திருப்பணி செய்யத்தொடங்கி, ஒரு சாரார் திருமதில் திருக்கோபுர முதலியவைகளில் முளைத்திருந்த மரங்களையுங் கொடிகளையும் பூண்டுகளையும் களைந்தார்கள். வேறொரு சாரார் பிராகாரம் திருவாயில் திருவீதி முதலிய விடங்களிற் கிடந்த கல் முள் புல் பூண்டுகளை யகற்றினார்கள். இன்னொருசாரார் திருநந்தனவனத்தைத் திருத்தினார்கள். மற்றொரு சாரார் திருவலகிட்டார்கள். பிறிதொருசாரார் திருப்பள்ளித் தாமந்தொடுத்தார்கள். இவ்வாறு

இவர்களியாவரும் உச்சிப்போது வரையில் திருப்பணி செய்தார்கள். மண்வெட்டி முதலிய ஆயுதங்களைக் கையிலெடுத்துப் பழகியறியாத இவ்வடியவர்கள் செய்யப்புகுந்த உழவாரத் திருப்பணிக்கு மனமுருகி உதவிபுரிவான் போல், வருணனும் அதற்கு முன்னிரவில் மழை பெய்வித்து நிலத்தைச் செப்பனிட்டு வைத்ததுமன்றி, அன்று பகலெல்லாம் மேகங்களைக் கொண்டு பந்தரிட்டு இறைவனரது திருவருளே யெனக் குளிர்ந்திருக்குமாறும் செய்தனன். பின்பு அடியவரியாவரும் அத்தலத்திலுள்ள திருநாவுக்கரசு சுவாமிகள் தண்ணீர்ப்பந்தரில் திருவமுதுசெய்து, பகல் 3-மணியானதும் ஸ்ரீ தியாகராஜப்பெருமான் சந்நிதியை யடைந்து சிவபுராண படனஞ் செய்து, இச்சபைக்குச் “சென்னைச் சிவனடியார் திருக்கூட்டம்” என்று பெயரிட்டு, அவ்வாறே மாதந்தோறும் தொண்டை நாட்டில் தேவாரம் பெற்ற தலங்கடோறும் சென்று வழிபடவேண்டும் என்று பிரேரேபித்தார்கள் அதற்குள் பிரதோஷகாலம் சமீபித்தது சமீபித்தலும், அடியவர்களியாவரும் மீண்டும் அநுட்டான முடித்துக்கொண்டு திருக்கோயிலை யடைந்து தேவார பாராயணம் செய்து எழுத்தறியும் பெருமானை இறைஞ்சி யேத்துவாரானர்கள். அச்சமயத்தில் இவர்களுள் ஒருவரும் அறிந்திராத வேதியரொருவர் இவர்களோடு ஒத்தவயதினராகவும் கண்டோர் மனம் காதலித்துருகுமாறு செய்யும் சிவவேடப் பொலிவினராகவும், இவர் இறைவனர் திருவருளுருவமேயோ என்று ஐயுறத்தோன்றி, தம்மைத் திருவையாற்றுச் சாமிநாத ஐயர் எனக்கூறி, இவர்களுடன் சிறிதும் வேற்றுமையின்றிப் பன்னெடுநாட் பழகினவர்போல் அளவளாவிச் சிவாலய வழிபாடு செய்து, பண்ணோடு தேவார பாராயணஞ் செய்து இவர்களை இன்பவாரிதியில் மூழ்குவித்தனர். அடியவர்களியாவரும் அவர் வசப்பட்டு அவரை மண்டபத்தில் எழுந்தருளுவித்து அவர் திருவடிகளில் வீழ்ந்து வணங்கினர்கள். அவ்வேதியர் உடனே எழுந்து “எவரேனுந் தாமாக” என்னும் முதலையுடைய ஒப்பற்ற திருத்தாண்டகத்தைத் திருவாய்மலர்ந்தருளி அடியார் கூட்டத்தைத் தரையில் வீழ்ந்து வணங்கினர். பின்னர் அவ்வேதியரும் அடியார் குழாமும் ஒருவரை யொருவர் விட்டு நீங்கமாட்டாதவராய்த் திருநாவுக்கரசு சுவாமிகள் தண்ணீர்ப் பந்தரையடைந்து அன்றிரவு முழுவதும் நித்திரையை மறந்து தேவார மோதிய வண்ணமாயிருந்து இன்புற்றனர்கள். பொழுது விடிந்ததும் அவ்வேதியர் தாம் (ரெயில்) புகைரத மூர்ந்து தம்மூருக்குப் போக வேண்டுமெனக் கூறி விடைபெற்றுச் சென்றனர். அடியவர்களும் அவரிடம் பிரியா விடைபெற்றுத் தத்தம் இல்லங்கட் கேகினர்கள்.

இவர் திருவொற்றியூரில் கண்ட அற்புதங்களாலும், அனுபவித்த இன்பத்தாலும், ஸ்ரீ தியாகராஜப் பெருமானார் சந்நிதியில் பிரேரேபிக்கப்பட்டவாறே மாதந்தோறும் சிவனடியார்களோடு தொண்டை நாட்டில் தேவாரம் பெற்ற தலங்களை யடைந்து வழிபடல் வேண்டும் என்னும் ஆசை வசப்பட்டு, அடுத்த தைமாத முதலாகச் சிவதலயாத்திரைகள் செய்யத் தொடங்கி மாதந்தோறும் தப்பாமல் நூற்றுக்கணக்கான சிவனடியார்களோடு சிவதலயாத்திரை செய்து அவ்வண்ணமே வழிபாடு செய்து, சார்வரி வருடத்திற்குள் தொண்டை நாட்டிலுள்ள தேவாரம் பெற்ற தலங்கள் முப்பத்திரண்டையும் தரிசித்து வழிபட்டனர். இத்திருக்கூட்டம் சென்ற தலங்கடோறும் சிவனடியார்கள் நூற்றுக்கணக்காகவும் ஆயிரக்கணக்காகவும் கூடிச் சர்வோபசாரத்தோடும் எதிர்கொண்டழைத்துச் சென்று உற்சவங்கள் செய்தும், மாகேசுர பூசை செய்வித்தும், திருவிழாக்கொண்டாடி இவர்களோடு ஆராவன்பின் அளவளாவி வழிபடுவாரானார்கள். இவ்யாத்திரைக் காலங்களில் பல அற்புதங்கள் உண்டாயின. இவர் ஸ்ரீ தியாகராஜப் பெருமானரைச் சபாநாயகராகச் சிந்தித்து, தாம் காரியதரிசியாயிருந்து தொண்டை நாட்டுத் தலயாத்திரையைப் பூர்த்தி செய்தமையால், யாவருக்கும் அநுகூலமாகிய ஓர் ஆதிவாரத்தில் அப்பெருமானருக்கு மகாபிடேகாதி யுபசாரங்கள் செய்து தொண்டை நாட்டுத் தலயாத்திரைப் பூர்த்தி விழாவைக் கொண்டாட விரும்பினர். விரும்புதலும், சோமவாரத்திலும் விசேட புண்ணியகாலங்களிலு மாத்திரமன்றி ஆதிவாரத்தில் அப்பெருமானருக்கு அபிஷேகஞ்செய்யும் நியதியில்லாமையால் இவர் தமது எண்ணம் முற்றுறாமல் வருந்திநின்றனர். காரியதரிசியும் மற்றுமுள்ள சபையார்களும் அவ்வாறு வருந்தி நின்றபோது சபாநாயகர் வாளாவிருப்பரோ? ஸ்ரீ தியாகராஜப் பெருமான் தாம் எழுந்தருளியிருக்கும் மண்டபத்தின் ஸ்தூபிகலசத்தைக் கள்வர்கள் அபகரிக்கச் செய்தனர். அதனை அத்தலத்து ஆதிசைவரறிந்து, இது சிவனடியார் திருக்கூட்டத்தின் பெருமையை விளக்கும் அற்புதச் சம்பவமாம் என்றுணர்ந்து, காரியதரிசியாகிய இவரிடம் சென்று, கலசம் களவாடப்பட்டமையை யறிவித்து, இவர்கள் விரும்பியவாறே ஸ்ரீ தியாகராஜப் பெருமானருக்கு ஆதிவாரத்திலேயே கும்பாபிஷேக மகோற்சவம் செய்யலாம் என்று தெரிவித்தனர். இவர் அதைத் திருக்கூட்டத்திற்கு அறிவித்து சார்வரிஸு தைமீ 22உ (3-2-1901) ஆதிவாரம் பௌர்ணிமை பூசநட்சத்திரங் கூடிய சுபதினத்தில் ஸ்ரீ தியாகராஜப் பெருமானருக்குக் கும்பாபிஷேகமும் திருவீதி மகோற்சவமும்,

ஸ்ரீ படம்பக்கநாதராதிப் பஞ்சமூர்த்திகளுக்கும் அறுபத்துமூன்று நாயன்மார்களுக்கும் மகாபிஷேகாதி யுபசாரங்களும், பிராமண சர்தர்ப் பணை மாகேசுர பூசை அன்னதான முதலியவைகளும் சர்வாடம்பரங் களோடும் சிறப்பாய்நடத்தித் தொண்டைநாட்டுத்தலயாத்திரைப் பூர்த்தி விழாக்கொண்டாடினர். அதன் பிறகு அவ்வண்ணமாகவே மாதந் தோறும் தப்பாமல் யாத்திரை செய்து சோழநாட்டிலும் கொங்குநாட்டி லும் நடுநாட்டிலும் உள்ள பல தலங்களைத் தரிசித்தார்.

இவர் அவ்வாறு திருக்கூட்டத்தோடு சிவதலயாத்திரைகள் செய்து வந்தபோது, சென்னை மாநகரில் சைவசமயிகட்கெனப் பொதுவான தொரு சபாமண்டபம் இல்லாமையையெண்ணி அக்குறைவை நீக்கு மாறு திருக்கூட்டத்தைக்கொண்டு பொருள் சேகரித்தும், தமது கைப் பொருளைக் கொண்டும் மிகவும் பிரயாசை யெடுத்துக்கொண்டு 2,500 ரூபா வரையில் செலவிட்டுச் சபாமண்டபங் கட்டினர். அதைத் தொடங்கிய பிறகு இவருடைய உத்தியோகத்தானமானது சென்னை மாநகரிலிருந்து கல்கத்தாவுக்கு மாற்றப்பட்டது. மாற்றப்படவே, அர சாங்கத்தினர் இவரை கல்கத்தாவுக்குப் போகும்படி ஆஞ்ஞாபித்த னர். அதனால் இவரும் திருக்கூட்டத்தார்களும் ஒருவரையொருவர் விட்டுப் பிரியமாட்டாமல் மனம் வருந்த, திருக்கூட்டத்தினர் இவர் பிரிவாற்றாமையை விளக்கி இவர் மீது வாழ்த்துப் பாக்களைப்பாடி ரெல்யிவே ஸ்டேஷன் முற்றும் பெருங் கூட்டமாகக்கூடி கண்ணீர்விட்டு வழிவிட்டார்கள். இவர் கல்கத்தாவுக்குச் சென்றனரேனும் இவர் மன மெல்லாம் திருக்கூட்டதினிடத்திலேயே பதிந்திருந்தது. சபாமண்டபம் பூர்த்தியாகாமையை எண்ணி வருந்துவாராயினர். கல்கத்தாவுக்குச் சென்ற ஒரு மாதத்திற்குள் திருவருட்செயலாக இவர் சரீரம் மிகவாடி உணவேற்றுக் கொள்ளாமல் இருந்தனர். அதை அரசாங்கத்தின ரறிந்து உடனே இவருக்கு முழுச்சம்பளத்தோடு மூன்றுமாதம் விடு முறை கொடுத்துச் சென்னைக்குத் திரும்பிச் செல்லுமாறு அநுமதி கொடுத்தார்கள். அச்சமயத்தில் இவர் மனைவியார் ரெயிலில் நெடுந் தூரம் பிரயாணஞ் செய்யக்கூடாத அவ்வளவு அபாயகரமான நிலை மையி லிருந்தனர். அதனையும் இவர் பொருட்படுத்தாது அத்திரு வருட் செயலை யுன்னி வியந்து திருக்கூட்டத்தினர் மகிழ சென்னைக்கு வந்து கொங்குநாட்டிலுள்ள திருமுருகன்பூண்டி, அவிநாசி, திருப் பாண்டிக்கொடுமுடி, திருநணு, திருச்செங்கோடு, சேலம் முதலிய சிவ தலங்கட்கு திருக்கூட்டத்துடன் யாத்திரை செய்தனர். அச்சமயத் தில் ஸ்ரீமான் ஜெ. யெம். நல்லசாமிப் பிள்ளை யவர்கள் B.A., B.L.,

சேலமாநகரில் டிஸ்ட்ரிக்ட் முனிசீப்பாய் இருந்தனர். அவர் திருக்கூட்டத்தை அவ்விடம் வருவித்து அவ்வூர்ச் சிமான்கள் பலரும் சிவனடியார்கள் எண்ணிறந்தோறும் கூடி எதிர்கொண்டு சர்வோபசாரங்கள் செய்துவர நகர்வலஞ் செய்வித்து விழாக்கொண்டாடுவித்தனர்.

ஸ்ரீமான் ஜெ. யெம். நல்லசாமிப் பிள்ளையவர்கள் கொங்கு நாட்டுத் தலயாத்திரையில் இத்திருக்கூட்டத்திற்குச் செய்த பேருபகாரங்கள் மிகவும் பாராட்டற்பாலனவாம். அவர் உடனிருந்து திருச்செங்கோடு முதலிய தலங்கட்கு யாத்திரை செய்வித்துச் சிறப்பித்ததுமன்றி, சபாமண்டபத்தின் பொருட்டுப் பல தனவான்களிடம் மெய் வருத்தம் பாராது அழைத்துச் சென்று பொருள் சேகரித்துக் கொடுத்தும் உதவிபுரிந்தனர். இந்த யாத்திரைக்கு ஸ்ரீலஸ்ரீ ம. தி. பானுகவி சுவாமிகள் விஜயஞ்செய்து தலங்கடோறும் சைவப் பிரசங்க மாரி பொழிந்தனர். இவர்கள் யாவரும் செய்த மிக்க உபகாரங்களால் இவர் தாம் கல்கத்தாவிலிருந்து பெற்றுக்கொண்டு வந்த விடுமுறை கழியுமுன் சபாமண்டபத்தைக் கட்டி முடித்து, 1915ஹு மேமீ 25வ அடியவர் குழாம் திருமறைக்காட்டுக் கதவந் திறந்த திருப்பதிகம் ஓதவும், ஸ்ரீமான் ஜெ. யெம். நல்லசாமி பிள்ளையவர்கள் பொற்றிறவு கோலால் கதவு திறக்கவும், ஸ்ரீலஸ்ரீ ம. தி. பானுகவி சுவாமிகள் முதலிய வித்வசிரோமணிகள் பிரசங்கமாரி பொழியவும், சர்வாடம்பரமாக சபாமண்டபப் பிரவேச மகோற்சவம் கொண்டாடி உடனே மீண்டும் கல்கத்தாவுக்கேகினர்.

இவர் சபாமண்டபம் கட்டத் தொடங்கியபோது பெங்களூரில் வசித்திருந்த பெருங்கொடையாளியாகிய ஸ்ரீமான் ஆற்காடு மெய்கண்டதேவ முதலியாரவர்கள் திருக்கூட்டத்தின் பெருமையை யறிந்து, திருக்கழுக்குன்றத் தலயாத்திரையில் இவர்களைச் சந்தித்து உடனிருந்து சிவாலய வழிபாடாதிகள் செய்து இத்திருக்கூட்டத்தினிடம் பேரன்பு பூண்டு, இவர்கள் கட்டத்தொடங்கிய சபாமண்டபத்திற்கு 250 ரூபா உதவியதுமன்றி, இவர்கள் சபாமண்டபப் பிரவேசம் செய்யப்போவதை யறிந்து தாமே 25 ரூபா அனுப்பிச் சபாமண்டபப் பிரவேச மகோற்சவத்தை மிகச் சிறப்பாகக் கொண்டாடுவித்தனர்.

இவர் கல்கட்டாவிற்குச் செல்ல விருந்தபோது, 1905ஹு மார்ச்சுமீ 19வ சென்னைச் சிவனடியார் திருக்கூட்டத்தினர் மகாஜனக் கூட்டம் கூட்டி அச்சிட்டு வெளியிட்டு வாழ்த்திய வாழ்த்து மஞ்சரி:—

## வாழ்த்து மஞ்சரி.

கடல்புடை யுடுத்த நெடுநில வரைப்பிற் கண்ணுத லடியவர் கூட்ட
மடல்விடை யுகைத்த கடவுட னிடங்க ளடைந்தடைந் தருந்தமிழ் வேதந்
தடைகெட வுரைத்துப் பணிதிற மமைத்த சத்துவ வுத்தம சுகுண
மடலுடைக் குவளை யாதிமூ லாநின் மாபுக ழோங்குக மலிந்தே. (௧)

சீருறு மிருக்கத் தண்ணலே நினது சிந்தையின் வலியினா லன்றோ
ஏருறு தமிழின் வேதநல் லடியா ரிருங்கட லுடுத்த பாரதனில்
நாருறு திறமாய்ப் பயின்றன ராதி மூலநற் பெயருறு நண்ப
பாருறு நினது புகழ்ச்செய லறம்போற் படர்ந்தினி தோங்குக மலிந்தே. (௨)

ஐந்துறழ் முப்பான் சிவத்தல மணைந்தெம் மண்ணலை யடியவ ரொருங்கே
வந்தனை புரியுஞ் செயலினுக் காக வைத்தநின் முயற்சிகண் மறவேஞ்
சுந்தர சுகுண வாதிமூ லப்பேர்த் தோன்ற னீயார்ந்த தொல்புகழ்கள்
பந்தணி விரலா ளறமென நாளும் படர்ந்தினி தோங்குக மலிந்தே. (௩)

தாமரை யணிந்த புயமிரண் டுடைய சம்பந்த னாதிய ரளித்த
மாமறைப் பொருளார் தமிழ்மறை யுலகோர் மாண்புடன் பயிலுமா செய்த
கோமக னெவனோ வாதிமூ லப்பேர்க் கொண்டநின் றனையன்றிக் குறிக்கின்
மாமிகு நினது புகழ்மறை யெனவே மாண்புட னோங்குக மலிந்தே. (௪)

தூமதி யணிந்த சுருதிநா யகனைத் தொழுந்திற முடையவர் குழுமி
நேமமிக் கவராய்ப் பலதளி புகுந்து நெருங்கிநின் றேத்திடு திறஞ்செய்
தேமலி குவளைத் தாரணி யாதி மூலநின் சீர்ப்புகழ் நாளு
மாமறை யுரைத்த வறமென விளங்கி மாண்புட னோங்குக மலிந்தே. (௫)

அளவில்சீர்ச் சென்னைச் சிவனடி யவர்க ளார்சபா மண்டப மதனை
வளமுற வமைத்த நினதுசீர்க் கம்ம வையகத் தெவரிணை யுறுவோர்
அளகையா னெனவெம் மிறைவனுக் குரிய வாதிமூ லப்பெய ரண்ணல்
பளகறு நினது தவப்புக ழறம்போற் பரந்தினி தோங்குக மலிந்தே. (௬)

சூலிகை யழலிற் றூய்மையார் குணத்துத் துறவினர் புகழ்மனை யறத்தோய்
மாலிகை குவளை யாவுடை யாதி மூலநல் லரனடி யவர்கள்
பாலிகை யுடன்வந் தெதிர்கொளப் புரிந்த பகருந் தவப்புக ழனைத்துஞ்
சாலிகை மறுவா வுடையவர் புரிந்த தவமென வோங்குக தழைத்தே. (௭)

நின்குல முதல்வ ருபேந்திர னடிக ளினைதரு தவமத னானீ
அன்புடை யன்னோர் வழிபடு மாதி மூலநற் பெயருட னடைந்திம்
மன்பதை சைவ மணம்பெறப் புரிந்த மாக்ஷிமை யுறுதவப் புகழ்கள்
இன்புறு குடிலை மறைப்பொரு ளென்ன; வினையின்றி விளங்குக விசைந்தே. (௮)

சித்தர்கள் முதலா யுறுந்தவர் புகழுஞ் சென்னையம் பதியுறு நினது
புத்தியை யிடமாக் கொடுவெளிப் போந்த புகழடி யவர்திருக் கூட்ட

மித்தரை முழுதும் பாவிமே லோங்கி யெண்ணறு கிளைகளா யிலங்க
லுத்தம வாதி மூலவெந் நாளு மோங்குமெம் மிறையென வுயர்ந்தே (௯)

சைவமந் திரமுந் தமிழ்த்திரு மறையுஞ் சங்கர னடியவர் குழுவுந்
தெய்வ சன்னிதியுந் திகழிரு சுடருந் திருந்தொளி யுறுநுத லவனு
மைவரு முறுமா பூதமு மென்ன வாதிமூ லப்பெய ரண்ணல்
செய்தவப் புகழ்கள் குறுமுனி காம்போற் சிறந்தினி தோங்குக செழித்தே. (௧௦)

எம்மையா ளுடைய சங்கரி காத்தி லிருந்தவ தரித்தநற் கங்கை
சும்மையோ டலவு கல்கட்டா நகர்க்குத் துரைத்தன முறையினுற் புகுநீ
செம்மையோ டுயர்ந்த திருவுடன் விரைந்துசென்னையி லுறமதி யணிந்தார்
தம்மையே நினைக்கு மெம்மனோர் நினைவைத் தருமிறை தனித்திரு வுளமே. (௧௧)

இவர் கல்கட்டாவுக்குச் சென்றபோது சென்னைச் சிவனடியார் திருக்கூட்டம் மிகவும் உன்னதமான நிலையிலிருந்தது. இச்சபையின் வருகையைப் பலரும் பெருங்காதலோடு எதிர்பார்ப்பவர்களா யிருந்தார்கள். இவருக்குப் பதிலாக இருவர் காரியதரிசிகளாக நியமிக்கப் பெற்றனர். இவர்களோடு பத்துப்பேர் அத்தியட்சர்களாயிருந்தார்கள். இவர் கல்கட்டாவிலிருந்து அடிக்கடி பொருளுதவி செய்துகொண்டிருந்தனர். இவ்வாறிருந்தும் இச்சபை நாளுக்குநாள் பொலிவழியத் தலைப்பட்டது. மெய்யன்புடையார் சிலர் சிவபதமடைந்தனர். இவைகளை யறிந்த அயலவர் சிலர் துராக்கிரதமாகச் சபாமண்டப முதலியவைகளை அபகரிக்கத் தோன்றினர். அவர்களோடு சுயநலங் கருதிச் சபையின் அத்தியட்சர்கள் சிலரும் சேர்ந்து கலகம் விளைவித்துச் சபாமண்டபத்தையும் அதைச் சார்ந்த ஆலயம் வீடு முதலியவைகளையும் பராதீனப்படுத்திவிட்டார்கள். அதனை இவர் அறிந்து காசி பிரயாகை கயை முதலியவற்றைத் தரிசித்து 27 மாதங்களுக்கு விடுமுறை பெற்றுக்கொண்டு மீண்டும் சென்னைக்கு வந்தனர். இவர் அவ்வாறு வந்தபோது இவருக்கு 180 ரூபா மாதச் சம்பளமா யிருந்தது. இவர் பின்னும் சில காலம் உத்தியோகத்திலிருந்தால் 200 அல்லது 300 ரூபா உபகாரச் சம்பளம் பெறலாம். அவ்வாறிருந்தும் இவர் மூன்றிலொரு பங்கு (60 ரூபா பென்ஷன்) உபகாரச் சம்பளம் பெற்றுக்கொண்டு உத்தியோகத்தை நிவர்த்தி செய்துகொண்டு ஹைகோர்ட்டில் வியாச்சியம் நடத்திச் சபையை நிலைநிறுத்தித் தம்மாலியன்ற வழிகளிலெல்லாம் சைவசமய பரிபாலனம் பண்ணத் தொடங்கினர்.

அச்சமயத்தில் செல்வச் செருக்கால் மிகவும் அக்கிரமமாய் இச்சபையை யழித்துச் சபாமண்டபத்தைப் பிறர் வசமாக்க முயன்று இவரைத் தாக்கி மனம் நோவச்செய்த ஒருவர்

"பத்தினி பத்தர்கள் தத்துவ ஞானிகள்
சித்தங் கலங்கச் சிதைவுகள் செய்தவர்
அத்தமு மாயுளு மாண்டொன்றின் மாய்ந்திடுஞ்
சத்திய மீது சதாநந்தி தாளே"

என்னும் திருமந்திரத்தின் வாய்மையை விளக்குவார்போல் திடீரெனப் பெருவியாதி யடைந்து மிக வருந்தி இறந்தனர்.

இவர் திரும்பிச் சென்னைக்கு வந்தபோது முன்போல் திருக்கூட்டம் என்னும் பேரை வகித்துச் சிவதல யாத்திரை செய்தற்கு அருகராவாரைக் காண்பதரிதாயிருந்தது. ஆதலால் இவர் பெருஞ் செலவிட்டும் மிகவும் பிரயாசை யெடுத்துக்கொண்டும் ஹைகோர்ட்டில் வியாச்சியம் செய்து எதிரிகளை ஜெயித்துச் சபாமண்டபத்தையுங் கோயிலையுங் காப்பாற்றிச் சிவதல யாத்திரைகள் செய்வதைச் சுருக்கிச் சபையைப் பலப்படுத்தி நிரந்தரமானவும் சைவசமயப் பாதுகாப்புக்கு இன்றியமையாதனவுமான காரியங்களைச் செய்யத் தொடங்கி, சபையை அரசாங்கத்து 1860-வது வருடத்து 21-வது சட்டத்தின்படி ரிஜிஸ்டர் செய்வித்தனர்.

அதன்பின், சைவ சமய பாதுகாப்புக்குப் பாடசாலைகள் இன்றியமையாதனவென்பதைக் கடைப்பிடித்து, The Saivite Elementary School என்னும் சைவபாடசாலையைத் தாபித்து நடத்தி வருவாராயினர். நடத்திவந்தபோது, சிலர் இப்பாடசாலையை யெடுத்துவிட்டு முன்போல் யாத்திரை செய்ய வேண்டுமென்று கலகஞ்செய்து, தங்கள் கருத்து முற்றுறாமையால், இதினின்றும் பிரிந்து சென்னை மெய்கண்ட சிவனடியார் திருக்கூட்டம் எனப் பெயரியதொரு சபையைத் தாபித்தனர். இவர்களுள் தலைவராயிருந்தவர் தாம் சபை தாபித்த ஒரு மாதத்திற்குள் இறந்துபோயினர். அவரோடு அம்மெய்கண்ட சபையும் பொய்கண்ட சபையாய் முடிந்தது. அச்சமயத்தில் இப் பாடசாலை வைக்கப்பட்டிருந்த வீட்டுக்குடையவர்கள் அவ்வீட்டை மூன்று மாதங்களுக்குள் காலிசெய்துகொடுக்கும்படி நிர்ப்பந்தஞ் செய்தார்கள். இவ்வாறு இவருடைய நன்முயற்சிகளுக்கு இடையூறுகள் மேலு மேலும் உண்டாயின. பாடசாலைக்கு வேறு தகுந்த இடம் கிடைக்கவில்லை. ஆதலால் இவர் மாதம் ஒன்றுக்கு மூன்று ரூபா வீதமாக வாடகை கொடுத்து ஒரு காலி நிலத்தை முப்பது வருட வாடகைக்கு வாங்கி, சுமார் 1600 ரூபா வரையில் செலவிட்டு மூன்று மாதங்களுக்குள் பாடசாலைக்கென ஒரு கட்டடம் கட்டி அக்கட்டடத்தில் இப் பாடசாலையை வைத்து நடத்திவருவாராயினர். அப்போது இப்பாடசாலையில் ஒரு உபாத்தியாயரே யிருந்தார். இப்போது இது மிகவும் விருத்தியடைந்து மூன்று

உபாத்தியாயர்களுடையதாய் அரசாங்கத்தின் உதவியைப்பெற்று பிரசித்தி பெற்று நிலவுகிறது. Messrs. Best & Co, துவிபாஷிகர் ஸ்ரீமான் ராவ்பஹதூர் யஸ். இரத்தினவேல் செட்டியார் அவர்கள் இவர் கட்டிய கட்டடத்தை விலை கொடுத்து வாங்கி இப்பாடசாலைக்கு வாடகையின்றி இலவசமாகக் கொடுத்திருக்கிறார்கள்.

இவர் கல்கட்டாவிலிருந்தபோது சைவ சித்தாந்த மகாசமாஜம் தோன்றி வருடாந்தக் கூட்டம் கூடுவதை யறிந்து, ம-ா-ா-ஸ்ரீ ஜெ. யம். நல்லசாமி பிள்ளையவர்களுக்குக் கடிதம் எழுதி, சமாஜம் நாடகசாலைகளைப் போல் வெறும் பிரசங்கத்தினளவா யிருப்பதில் பயனில்லையென்றும், பல வழிகளிலும் சமய பரிபாலனம் செய்ய முயலுதல் வேண்டும் என்றும், சைவ சமயாபிமானிகளின் கடமைகள் இன்னவையென விளக்கி உபந்நியாசங்கள் செய்யவேண்டும் என்றும் தெரிவித்தனர். ஷை பிள்ளையவர்கள் இவருக்குப் பதில் எழுதி சைவ சமயிகளின் கடமையை விளக்கி ஒரு வியாசம் எழுதி யனுப்பும்படி கேட்டனர். இவர் சென்னைக்கு வந்ததும், அவ்வியாசத்தை மிக விரிவாயெழுதி டெம்மி 8 பக்க அளவில் 20 பக்கங்கள் கொண்ட ஒரு புத்தகமாக 1000 பிரதி அச்சிட்டு, இராமநாதபுரத்தில் கூடிய மகாசமாஜத்து ஐந்தாவது வருடாந்தக் கூட்டத்தில் அரங்கேற்றினர். 1912ஷு ஷை சமாஜத்தின் காரியதரிசியாயிருந்து சென்னை விக்டோரியா பப்ளிக் ஹால் என்னும் நகர மகா மண்டபத்தில் மகா சமாஜத்தின் 6-வது வருடாந்தக் கூட்டத்தை மிகச்சிறப்பாய் நடத்துவித்தனர். சைவ சித்தாந்த மகா சமாஜத்தின் காரியங்களை நடத்தற்குச் சுமார் 3 வருடம் வரையில் திருக்கூட்டச் சபாமண்டபத்தில் இடங்கொடுத்து ஆதரித்தனர். இரண்டு வருடம் வரையில் பொக்கிஷதாரராயிருந்து சமாஜத்து அத்தியக்ஷர்கள் சிலர் காட்டிய குரோதத்தாலும், ஒற்றுமையின்மையாலும் ஷை சமாஜத்தினின்றும் நீங்கினர்.

இவர் திருக்கூட்டத்தின் சார்பாக ஒரு சைவப் பத்திரிகை வெளியிட்டுவர விரும்பி, அதற்குப் போதிய தமிழ்ப் புலமை தமக்கில்லையென நினைந்து, தமிழ்ப்பண்டிதர் சிலரை பத்திரிகாசிரியராயிருந்து உதவி செய்யுமாறு வேண்டினர். அவர்கள் மிகவும் கால தாமதஞ் செய்தமையால், இவர் திருவருளையே துணையாகக்கொண்டு தாமே இயற்றிவரத் துணிந்து சைவம் எனப்பெயரிய சீரிய பத்திரிகையை வெளியிடத் தொடங்கினர். இப்பத்திரிகை சிவபெருமானர் திருவருளால், இதற்கிணையான பத்திரிகை வேறில்லை யென்று எவரும் மதிக்கச் சொற்சுவை பொருட்சுவை நிரம்பித் தமிழ் நாடெங்கும் பிரசித்தி பெற்று

நிலவுகின்றது. ஒரு பெரிய பண்டிதர் "பத்திரிகை முழுதுஞ் சைவ மணங் கமழ்கின்றது. தன்னேக்கத்தையே கடைப்பிடித்துச் செல்லும் இத்தகைய பத்திரிகை நந்நாட்டிலரிது" என்று புகழ்ந்தனர். இன்னுமோர் பெரிய வித்வான் "சைவம் என்னும் மகுட நாமமுடைய மாசிகப் பத்திரிகை வாசிக்கும் பெற்றித்து. அறிவுடையவர்க்கு அமிர்தமாயிலங்குகின்றது" என்று வியந்தனர். மற்றுமோர் தமிழ்ப் பெரும் புலவர் "விஷயங்கள் சர்க்கரைப் பந்தலிற் றேன்மாரி பொழிந்தாற் போலக் கனிவாய்ச் செந்தமிழில் எழுதப்பெற்றிருக்கின்றன" என்று சந்தோஷித்துக் கூறினர். பலர் பாமாலைகள் சாற்றிப் புகழ்ந்தனர். இவ்வாறு கற்றல் கேட்டலுடைய பெரியார் பலர் பாராட்ட இன்றைக்கும் பத்திரிகை இயற்றி வருகின்றார். அன்றியும் இப்பத்திரிகையில் இலக்கிய விலக்கண நூல்களைப் பயின்று ஆசிரியர் பால் முறையாக வோதினர்க்கு மாத்திரமன்றிப் பிறர்க்கு எளிதாய் உணர வாராததும், ஞான நூல்களுக்கெல்லாம் தலையாயதுமான சிவஞான போதத்திற்குப் புதிய முறையிலும் எளிய நடையிலும் நவநீத உரை எழுதி இப்பத்திரிகையில் வெளியிட்டு வருகின்றனர்.

இப்பத்திரிகையை முதலில் இவ்விரண்டு பாரம் கொண்டதாக (அதாவது டெம்மி அளவில் 16 பக்கங்கொண்டதாக) வெளியிட்டனர். இப்போது மும்மூன்று பாரமாக (24 பக்கங்கொண்டதாக) வெளியிட்டு வருகின்றனர். இப்பத்திரிகையைத் தொடங்கிய பிறகு காகித விலை அச்சுக்கூலி தபாற்கட்டணம் முதலியன வெல்லாம் பன்மடங்கு அதிகரித்துப் பல பத்திரிகைகள் நடைபெறுதொழிந்தும், இவர் தாமே பத்திரிகாசிரியராகவும், லிகிதராகவும், ஏவலாளராகவும் போஷகராகவுமிருந்து சைவப் பத்திரிகையை வெளியிட்டு வருகின்றார். இவருக்காகப் பரிந்து இரங்கோனிலிருந்து ஸ்ரீமான் சைவ சித்தாந்தசரபம் சோளங்கிபுரம் சிவ அருணகிரி முதலியாரவர்கள் பிரேரணையால் அவர் மாணாக்கர்களாகிய ஸ்ரீமான் - செவு - சித - சொக்கலிங்கம் செட்டியாரவர்களும், ஸ்ரீமான் மெ - செ - மெ - மெ - இராமநாதன் செட்டியாரவர்களும், தெ - பழ - சித - சதாசிவம் செட்டியாரவர்களும், பல ஆயுள் சந்தாதாரர்களைச் சேர்த்து மூலதனமாக 2500 ரூபா சேகரித்துக் கொடுத்தார்கள்.

ஆதிமூல முதலியார் திருக்கூட்டச் சகிதமாய் யாத்திரை செய்த தலங்களின் அட்டவணை இதினீற்றில் அச்சிடப்பட்டுள்ளது. இவர் குடும்ப சகிதமாய் காசி, பிரயாகை, கயை, இராமேச்சுரம் முதலிய தலங்களையும், தரிசித்தனர். இத்தலயாத்திரைகள் மாத்திரமன்றி சென்னையிலும் இதின் சுற்றுப்புறங்களிலும் திருக்கூட்டச் சகிதமாய் எந்நேரமும்

தேவார பாராயணமும் சைவப் பிரசங்கமும் ஆலய வழிபாடும் நடத்தினர். பன்னிருதிரு முறைகளையும் திரட்டித் திருமுறைத்திரட்டு வெளியிட்டனர். இதன் பிறகே பலர் பல திருமுறைத் திரட்டுகள் வெளியிட்டார்கள். தேவாரத் திருமுறைகளுக்குத் திருவீதி மகோற்சவம் செய்து காட்டினர். பிறகு எங்கும் திருமுறை மகோற்சவம் நடை பெறுவதாயிற்று. இத்திருக்கூட்டம் தோன்றிய பிறகே பல திருக்கூட்டங்கள் தோன்றின. எங்கும் தேவார பாராயணம் முன்னினும் அதிகமாக நடைபெறலாயிற்று.

இவர் திருக்கூட்டத்துடன் சிவதல யாத்திரைகள் செய்ததுபோல் இதுகாறும் வேறெவரும் செய்ததில்லை. இவர் காரியதரிசியாயிருந்தது மாத்திரமன்றி திருக்கூட்டத்தினர் எல்லோர்க்கும் குற்றேவல் செய்பவருமாயிருந்தார். யாவரும் உண்ட பிறகு இவர் உண்பதும், யாவரும் உறங்கச் சென்ற பிறகே இவர் உறங்குவதும், எவர்க்கும் எவ்வகைக் குறைவும் நேரிடாதபடி காவல் செய்வதும், யாத்திரைக்கு முன்னமே தலங்கடோறும் போய் வேண்டியவற்றைச் சித்தஞ் செய்வதும், அவசியம் நேர்ந்தபோது மூட்டை சுமப்பதும், தீவட்டி பிடிப்பதும், மற்றவர்களை வண்டிகளிலேற்றித் தாம் நடந்துசெல்வதும் இவருடைய தொண்டுகளாயிருந்தன. இவரோடு உண்மைச் சிவனடியார்கள் பலர் யாத்திரை செய்து, துணை புரிந்தும், வாயாரத் தேவார பாராயணம் பண்ணியும் மன முருகச் சைவப் பிரசங்கங்கள் செய்தும், பேரன்போடு ஆலயவழிபாடு செய்தும், உழவாரத் திருப்பணி, திருவலகிடுதல், திருவிளக்கேற்றல், பூமாலை தொடுத்தல், கூத்தாடல் முதலிய திருத்தொண்டுகளைச் செய்வாராயினர். இத்திருக்கூட்டம் யாத்திரை செய்த தலங்கடோறும் அவ்வத்தலத்துப் பெரியோர்கள் அளவற்ற உபசாரங்களைச் செய்தார்கள். உடனிருந்து யாத்திரை செய்தவர்களுள் சென்னைச் சண்முக ஞானபுரவாசரும் சிதம்பர நடராஜ குஞ்சிதபாத நேசருமாயிருந்த மா. சுப்பராயப்பிள்ளையவர்களும், தேவார உபாத்தியாயர் மா. தங்கவேல் பிள்ளையவர்களும், சைவப் பிரசாரகர் கயப்பாக்கம் சதாசிவ செட்டியாரவர்களும், ஸ்ரீ கற்பவிநாயகர் திருவடி நீழலார் ஈக்காடு இராஜரத்தின முதலியாரவர்களும், தேவார சபைத் தலைவர் பெரளூர் ஆறுமுக முதலியாரவர்களும், தங்கவேல் செட்டியார், எழும்பூர் மதுரைநாயக முதலியார், பரசுராம முதலியார், கவுணியன் அச்சுக்கூடத்ததிபர்கள் கா. முருகேசச் செட்டியார், கா. சமரபுரிச் செட்டியார், மாங்காடு குருநாத முதலியார், திரு. வே. மாணிக்க முதலியார், ஐயப்பந்தாங்கல் த. சபாபதி முதலியார், காஞ்சிபுரம் சிவநேசத் திருக்கூட்டக்

காரியதரிசி பி. செ. முருகேச முதலியார் இராயப்பேட்டை ஆறுமுக முதலியார், காட்டூர்-வெங்கடாசல முதலியார், அணைவை-சண்முக முதலியார் முதலியவர்களும் மிகவும் சிரத்தையோடு முன்னிருந்து யாத்திரைகளை நடத்துவித்தார்கள். பல அற்புதங்களும் நடைபெற்றன. மாரிகாலத்தில் மழையினாலும், கோடைகாலத்தில் வெயிலினாலும் திருக்கூட்டத்தினிடையே வழிகளிற் சென்ற சர்ப்ப முதலிய விஷ செந்துக்களாலும், பலர் கூடிப் பகலிலும் இரவிலும் பல யாத்திரைகள் செய்யும்போது சகஜமாய் நேரிடக்கூடிய இடையூறுகளாலும் எவ்வித மான தீங்கும் நேரிட்டதில்லை. கொடிய கோடைகாலத்திலும், பல நாள் மழையில்லாத விடத்தும் திருக்கூட்டம் சென்ற தினத்தில் மழையில்லா திருந்ததில்லை. இத் திருக்கூட்டத்திலிருந்து யாத்திரை செய்த பெரியோர்களின் சரித்திரங்களையும், தலங்கடோறும் அன்பர்கள் செய்த உபசாரங்களையும் ஆங்காங்கு கண்ட அதிசயங்களையும், இறைவனருட்டிறங்களையும் விளக்கப்புகின் அது மிகப் பெரியதொரு புராணமாம்.

இவர் இவ்வாறு யாத்திரைகள் செய்தபோது, சிலர் திருக்கூட்டத்தைக் கலைத்து வெவ்வேறு சபைகளை வைத்து யாத்திரை செய்யத் தலைப்பட்டார்கள். இத்திருக்கூட்டத்திற்குப் பிறர் செய்த தீங்குகள் எல்லாவற்றுள்ளும் இவருக்குப் பதிலாகக் காரியதரிசிகளுள் ஒருவராக நியமிக்கப்பெற்றிருந்த முற்கூறிய அணைவை சண்முக முதலியாரும், அத்தியட்சருள் ஒருவராயிருந்த காட்டூர் வெங்கடாசல முதலியாரும் செய்த இடையூறுகள் மிகக் கொடியன. அவற்றால் திருக்கூட்டம் நிலை குலைந்துவிட்டது. ஆதலால் இவர்கள் செய்த இடையூறுகளையும், அவைகளாலும் சலிக்காமல் அரும்பாடுபட்டு ஆதிமூல முதலியார் திருக்கூட்டத்தை நிலைநிறுத்திச் சைவசமய பரிபாலனஞ் செய்து வருவதையும் இங்குச் சுருக்கி விளக்குவது மிகையாகாது.

## அணவை சண்முக முதலியாரும்
## காட்டூர் வேங்கடாசல முதலியாரும்

சென்னையில் தங்கசாலை வீதியில் ஸ்ரீ கற்பக விநாயகராலயம் என்னும் சிறு ஆலயம் ஒன்றிருக்கிறது. இது முற்காலத்தில் வண்ணாரிடையே இருந்தமையால் வண்ணாரப் பிள்ளையார்கோயில் என வழங்கப் படுகிறது. 1881ஸு இக்கோயில் பாஞு. சுப்பராய முதலியார் என்பவர் வசத்திலிருந்தது. அவர் இதையும் இதைச்சேர்ந்த ஒரு சிறு வீட்டையும் 1881ஸு ஏப்ரல்மீ 25உ ஈக்காடு இராஜரத்தின முதலி

யார் முதலிய நால்வர் கூடிய ஒரு சிறு சபையாரிடம் ஒப்புவித்தனர். இவர்களுள் மற்ற மூவரும் நாளடைவில் நீங்கிவிட இராஜரத்தின முதலியார் ஒருவரே தர்மகர்த்தராயிருந்து இக்கோயிலைப் பாதுகாத்து வந்தனர். இவர் திருக்கூட்டத்தின் நிர்வாக சபையினருள் ஒருவராயிருந்தமையாலும், இக்கோயில் முன்னே தம்மிடத்து மாத்திரமன்றி தம்மோடு மூவர் கூடிய ஒரு சபையாரிடம் ஒப்புவிக்கப்பட்டமையாலும், இதற்குச் சொந்தமான சிறு வீட்டின் வாடகை ரூபா ஆறுக்கு மேல் வருமானமில்லா திருந்தமையாலும், திருக்கூட்டத்தைக் கொண்டு பரிபாலிப்பித்துவர விரும்பிப் பலகாலும் வேண்டிக்கொண்டனர். திருக்கூட்டத்தினர் இவர் வேண்டுகோளுக்கிசைந்து, வர்த்தமானப் பத்திரிகைகள் வாயிலாகவும் விளம்பரப் பத்திரிகைகள் வாயிலாகவும் பலர்க்கும் அறிவித்து, 1904௵ நவம்பர்௴ 27௳ மகாஜனக் கூட்டம் கூட்டி, இராஜரத்தின முதலியாரிடமிருந்து இக்கோயிலைத் தங்கள் வசப்படுத்திப் பரிபாலித்து வந்தார்கள். திருக்கூட்டத்தார் 1905௵ கோயிலைச்சார்ந்த வீட்டு நிலத்தில் ஏறக்குறைய 2500 ரூபா செலவிட்டுச் சபாமண்டபம் கட்டி, மேல் மண்டபத்தைச் சைவப்பிரசங்கம் தமிழ்வேத பாராயண முதலியவைகளுக்கு உபயோகித்துக்கொண்டு, கீழ்மண்டபத்தைப் பத்து ரூபாவுக்கு வாடகைக்குவிட்டு அவ்வாடகையைக் கோயிலுக்கு உபயோகித்துக் கொண்டிருந்தார்கள். அன்றியும் கோயிலுக்கு வேண்டிய எவ்வகைப் பணிகளையும் செய்து பரிபாலித்துக் கொண்டிருந்தார்கள். இவ்வாறு 1908௵ வரையில் கோயிலைப் பரிபாலித்துக் கொண்டிருந்தார்கள். திருக்கூட்டத்தின் காரியதரிசிகள் பேராலேயே போலீஸ் லைசென்சும் வாங்கப்பட்டு வந்தன. திருக்கூட்டத்தின் வசம் வந்த பிறகு முன் கேள்வி முறையில்லாதிருந்த இக்கோயில் மிகவும் அபிவிருத்தி யடைந்தது. புங்கத்தூர் சிங்கார முதலியார் என்பவரொருவர் தாம் இறக்குமுன் வேலுபிள்ளை யென்பவரொருவர் மூலமாக 2000 ரூபாவுக்கு வீடுவாங்கி இக்கோயிலுக்கு தானஞ் செய்யும்படி பத்திரம் எழுதி வைத்தனர்.

அதற்கிடையில் ஆதிமூல முதலியார் 1905௵ உத்தியோக விஷயமாகக் கல்கட்டாவுக்குப் போக நேரிட்டமையால், திருக்கூட்டத்தார் இவருக்குப் பதிலாக முற்கூறிய இராஜரத்தின முதலியாரையும் அணவை சண்முகமுதலியாரையும் காரியதரிசிகளாக நியமித்தார்கள். 1908௵ இராஜரத்தின முதலியார் சிவபதமடைந்தனர். அவர் நோயால் வருந்தி இறக்குந் தறுவாயிலிருந்தபோது முற்கூறிய வேலுபிள்ளை சிங்காரமுதலியார் வைத்த திரவியத்தைக் கொண்டு ஒரு

வீட்டை வாங்கினர். கோயிலுக்கு முன்னிலும் அதிகமான வருமானம் வரக் காரணமாயிற்று. அதனால் இராஜரத்தின முதலியாருடைய பந்துக்கள் கோயிலையும் அதைச் சார்ந்த சபாமண்டபத்தையும் அப்போது வேலுபிள்ளை வாங்கினவீட்டையும் துராக்கிரதமாய்த் தங்கள் வசப்படுத்திக்கொள்ள விரும்பினார்கள். வேலுபிள்ளை சபாமண்டபத்தின் கீழ் கட்டடத்தைத் திருக்கூட்டத்திற்கு வாடகை கொடுத்து உபயோகித்துக் கொண்டிருந்தார். முற்கூறிய காட்டூர் வெங்கடாசல முதலியார் அக் கீழ் கட்டடத்திற்குக் குறைந்த வாடகைகொடுத்துப் புத்தகக்கட்டடக் கடைவைத்து அனுபவித்துவர விரும்பி வேலுபிள்ளையைத் தூண்டி இராஜரத்தின முதலியார் பந்துக்களுக்குத் துணையாய் நின்றார். இவைகளுக்கெல்லாம் வேலுபிள்ளை உடன்பட்டு திருக்கூட்டத்தை நிராகரித்து, இராஜரத்தின முதலியார் பேரைமாத்திரம் செப்பி தானபத்திரம் எழுதி, தாம் வாங்கின வீட்டைக் கோயிலுக்குத் தானஞ்செய்து, இராஜரத்தின முதலியார் இறந்து போகவும் தாம் அதுவரையில் திருக்கூட்டத்திற்கு வாடகை கொடுத்து உபயோகித்து வந்த சபாமண்டபத்தின் கீழ் கட்டடத்தின் வாடகையையும் புதிய வீட்டின் வாடகையையும் இராஜரத்தின முதலியார் மனைவியிடம் வசூல் செய்து கொடுத்தனர். கோயில் குருக்களைத் தம் வசப்படுத்திக் கொண்டு தாமே குருக்களுக்குச் சம்பளம் முதலியவைகளைக் கொடுத்து வந்தனர். இவ்வாறு வேலுபிள்ளையும், வெங்கடாசல முதலியாரும் இராஜரத்தின முதலியார் பந்துக்களும் சேர்ந்துகொண்டு எல்லாப் பொருள்களையும் அக்கிரமமாகத் தங்கள் வசப்படுத்திக் கொண்டு திருக்கூட்டத்தைச் சபாமண்டபத்தினுள் பிரவேசிக்க இயலாதபடி செய்தார்கள். அப்போது காரியதரிசியாயிருந்த அணவை சண்முகமுதலியாரால் யாதும் செய்ய இயலவில்லை. ஏனைய அத்தியட்சர்களும் மௌனமாயிருந்துவிட்டார்கள்.

## போலீசும் பயன்படாமை

இவைகளைக் கல்கட்டாவிலிருந்த ஆதிமூல முதலியார் அறிந்து 27 மாதங்களுக்கு விடுமுறை பெற்றுக்கொண்டு சென்னைக்கு வந்து எதிரிகள் செய்யும் அக்கிரமங்களைப் பொது ஜனக் கூட்டங்களைக் கூட்டிப் பரிகரிக்க முயன்றனர். அதனால் பயன் உண்டாகவில்லை. எதிரிகள் மேலுமேலும் அக்கிரமங்கள் செய்யத் தலைப்பட்டார்கள். சபாமண்டபத்தின் பூட்டுகளை உடைத்துச் சாமான்களைக் கொள்ளையடிக்கத் தலைப்பட்டார்கள். போக்கிரிகளை யேவி ஆதிமூல முதலியார் சபையினுள் புகாதபடி கொடுமைகளைச் செய்தார்கள். இவைகளை

ஆதிமூல முதலியார் போலீஸ் அதிகாரிகளுக்குக் கடித மூலமாக அறிவித்தனர். அதுவும் பயன்படவில்லை. இவர் எழுதிய கடிதமும் அதற்குக் கிடைத்த போலீஸ் இலாகாவின் விந்தையான பதிலும் வருமாறு :—

Madras, 24th July 1909.

From

The Secretary,

CHENNAI SIVANADIAR THIRUCCOTTAM,

To

THE DEPUTY COMMISSIONER OF POLICE,

Madras.

SIR,

I beg to submit that the Sri Karpaga Vinayagar temple (premisis No. 180, Mint Street, Madras, has been in possession of the Chennai Sivanadiar Thiruckoottam a society registered under Act XXI of 1860) since 1903. The society has erected a building known as the "Chennai Sivanadiar Thiruckootta Sabamantapam" in the above temple premisis, let its down - stairs hall to one Mr. Velu Pillai and has been using its upstairs hall as the society's premisis. On the death of the late secretary, Mr. E. Rajarathna Mudaliar, his wife, in collusion with the above Mr. Velu Pillai and Archaka of the temple, began to lay fictitious claims to the Dharmakarta - ship of the temple, and to give the society a lot of trouble The locks of the society's premisis are constantly broken, apparently by the above named persons. Consequently, the door was fitted with inside locks on the 17th July 1919. Even this lock has been broken and the doors are left open again.

As we have got our valuable pictures, records etc., in our society's premisis referred to above, and some of them are already missing, I request that yon will kindly

cause an enquiry to be made and prevent recurrence of similar house - breaking.

I am sir,
Yours Most faithfully
(Sd.) I. AUTHEMOOLA MUDALIAR,
Secretary, Chennai Sivanadiar Thiruckoottam,
Residing at No. 24, Nattu Pillaiar Covil St., G T Madras.

இதற்குக் கிடைத்தபதில் போஸ்ட் கார்டு (Post Card).

R.C. $\frac{1070}{R.C.D.}$

Police Deputy Commissioner's Office,
Northern Range,
Madras, 11th August 1909.

The Deputy Commissioner of Police has passed the following endorsement on your petition, dated 24th July 1909.

"I don't believe you have lost any property. The High Court has found you have no rights there, and the present Dharmakartha refuses to rent the building to you, and I refuse to interfere."

(By order)
M. ANANDAVELU,
Head Clerk.

இவ்வாறு போலிசும் பயன்படாதொழியவே ஆதிமூல முதலியார் தமது உத்தியோகத்தை நிவர்த்திசெய்துகொண்டு சொற்ப உபகாரச் சம்பளம் பெற்றுக்கொண்டு, பெருஞ் செலவிட்டும், பெரும்பிரயாசை யெடுத்துக்கொண்டும், ஹைகோர்ட்டில் ஸ்கீம் சூட் (Scheme suit) தாக்கல் செய்து வியாச்சியம் செய்து, எதிரிகளின் உபத்திரவங்களை யொழித்து, கோயிலையும் சபாமண்டபத்தையும், கோயிலுக்குரிய வீடு முதலியவைகளையும் காப்பாற்றிப் பொதுஜன சொத்துகளாக்கினர். இவ்வழக்கில் கனம்பொருந்திய ஹைகோர்ட்டார் செய்த தீர்மானம் இதினீற்றில் வெளியிடப் பட்டிருக்கிறது.

இதில் சபாமண்டபம் கோயில் நிலத்தில் கட்டப்பட்டமையால் கோயிற் சொத்தாக மதிக்கப்பட வேண்டுமென்றும், ஆனால் திருக்கூட் டத்தார் தாங்கள் அநுபவித்துவரும் சபாமண்டபத்தின் மேல்பாகத்

திற்குத் திருக்கூட்டம் உள்ளவரையில் கோயிலுக்கு மாதம் ஒன்றுக்கு எட்டணு வீதமாக வாடகை கொடுத்து வரவேண்டுமென்றும், மதராஸ் ஹிந்து தேவஸ்தான கமிட்டியால் நியமிக்கப்படும் இரண்டு ட்ரஸ்டிகளால் கோயிற் காரியங்கள் நடத்தப்படல் வேண்டுமென்றும், ட்ரஸ்டிகள் ஐந்து வருடகாலம் இருத்தல் வேண்டும் என்றும், அவசியமானுல் முன் இருந்தவர்களே மீண்டும் ஐந்து வருடங்களுக்கு ட்ரஸ்டிகளாக நியமிக்கப்படலாம் என்றும் விதிக்கப்பட்டது.

இவ்வாறு ஆதிமூல முதலியார் பகீரதப் பிரயத்தனம் செய்து, கோயில் முதலியவைகளைப் பொதுஜனச் சொத்துகளாக்கி, முன்னிருந்த நேசம்பாராட்டி, மதராஸ் ஹிந்து தேவஸ்தான கமிட்டியார் அணவை சண்முக முதலியாரை கோயில் ட்ரஸ்டியாக நியமிக்குமாறு செய்தனர். அணவை சண்முக முதலியார் ட்ரஸ்டியாக நியமிக்கப்பெற்ற உடனே தம்மைக் கோயிலதிகாரியாகவும் திருக்கூட்டத்தாரைத் தமது குடித்தனக்காரராகவும் எண்ணிக்கொண்டார். தமது அச்சுக்கூடத்தைத் திருக்கூட்டத்திற்கு அதிக விலைக்குவிற்றுப் பெருத்த இலாபஞ் சம்பாதிக்கமுயன்ருர். இதற்குத்திருக்கூட்டத்தார் இடங்கொடாமற் போகவே இவரும் திருக்கூட்டத்தைப் பகைத்து உபத்திரவஞ்செய்யத் தொடங்கிவிட்டார். முன் தம்மை விரோதித்துக் கோயில் முதலியவைகளைப் பராதீனப் படுத்திய காட்டூர் வெங்கடாசல முதலியாருடன் தோழமை கொண்டு, அவரே நெடுங்காலம் அனுபவித்து வருமாறு சபாமண்டபத்தின் கீழ்கட்டடத்தை அவருக்கு மிகவும் குறைந்த வாடகைக்கு விட்டார். முதல் 5 வருடங்கள் கழிந்தபிறகு மதராஸ் ஹிந்து தேவஸ்தான கமிட்டியார் அணவை சண்முக முதலியாரோடு ஆதிமூல முதலியாரையும் இரண்டாவது ஐந்து வருடங்களுக்கு ட்ரஸ்டிகளாக நியமித்தார்கள். சண்முக முதலியார் ஆதிமூல முதலியாருக் கிடங்கொடாமலே கோயில் கணக்கு முதலியவைகளைத் தம் வீட்டிலேயே வைத்துக்கொண்டு பலவழிகளில் அக்கிரமமாக நடந்துகொண்டிருந்தார். சபாமண்டபத்தின் கீழ் கட்டடத்திலிருந்து மேல் கட்டடத்திற்குப் போகும்படி புதியதொரு படி போடச் சம்மதித்து, அதன்பொருட்டுத் திருக்கூட்டத்திற்கு அதிக செலவு நேரிடச்செய்து, திருக்கூட்டத்தார் எல்லாச் சாமான்களையும் சித்தப்படுத்தித் தம்முடன் கலந்து நன்னுள் வைத்துப் படி கட்டத் தொடங்கியபோது, வெங்கடாசல முதலியாருக்கு உடனுயிருந்து, வெங்கடாசல முதலியார் வாடகை கொடுத்து உபயோகிக்கும்வரையில் படி போடாதபடி தடுக்குமாறு செய்துவிட்டார். திருக்கூட்டத்தார் கீழ் கட்டடத்திற்கு எவ்வளவு அதிகமாகவாயினும் வாடகை கொடுத்து

அதில் தங்கள் அச்சுக்கூடத்தை வைத்து நடத்தப் பல கால் முயன்றும் அதற்குச் சண்முகமுதலியார் இடங்கொடாமல் வெங்கடாசல முதலியாருக்கே குறைந்த வாடகைக்குப் பலநாளும் விட்டிருந்தார். இவர் நெடுங்காலமாக சுவாசகாசத்தால் பீடிக்கப்பட்டும் படுக்கையிலேயே கிடப்பவராயிருந்தும் தமக்குப் பின்வரும் ட்ரஸ்டிகளும் கீழ் கட்டத்தைத் திருக்கூட்டத்திற்கு வாடகைக்கு விடாதபடி தடுக்குமாறும், வெங்கடாசல முதலியாரே அதைப் பலநாள் அனுபவிக்குமாறும் மற்றொரு ட்ரஸ்டியாகிய ஆதிமூல முதலியாருடன் கலவாமலே, தமது பேரோடு ஆதிமூல முதலியார் பேரையுஞ்சேர்த்து வெங்கடாசல முதலியாரிடம் குடிக்கூலி உடன்படிக்கை எழுதி வாங்கிக்கொண்டார். அணவை சண்முக முதலியார் செய்த இவ்விதமான இடையூறுகளால் திருக்கூட்டத்தார் சைவ சமயப் பாதுகாப்பினிமித்தம் தாபித்து நடத்திய வைதிகசைவ அச்சுக்கூடத்தை விற்றொழித்துவிட நேர்ந்தது. சண்முக முதலியாருடைய அக்கிரமச் செயல்கள் இன்னும் பலவுள. அவற்றை விரிக்கிற் பெருகும்.

## மதராஸ் ஹிந்து தேவஸ்தான கமிட்டியின் ஒழுங்கீனம்.

ஆதிமூல முதலியார் சண்முக முதலியாருடைய அக்கிரமச்செயல்களை விவரமாய் எழுதி மதராஸ் ஹிந்து தேவஸ்தான கமிட்டிக்கு அறிவித்தார். அக்கடிதத்தைக் கமிட்டியின் கூட்டத்தில் வைத்து விசாரிக்கப்போவதாக கமிட்டியின் தலைவராயிருந்த திவான்பஹதூர் இராஜரத்தின முதலியாரும், ஸர். பி. தியாகராஜ செட்டியாரும் தெரிவித்தார்கள். கமிட்டி காரியதரிசியாகிய ம-௱-௱-ஸ்ரீ ஆர். சுப்பிரமணிய ஐயர் B.A., B.L., யாது காரணத்தாலோ முதலில் ஆதிமூல முதலியார் கடிதத்தைக் கமிட்டி முன்வைத்து விசாரணை செய்விக்க விரும்பவில்லை. பிறகு முற்கூறிய இரண்டு கமிட்டி மெம்பர்களின் தூண்டுதலால் அக்கடிதம் 1917௵ ஏப்ரல்மீ 22௳ கூடிய கமிட்டி கூட்டத்தில் விவகரிக்க வேண்டுமென உத்தேசிக்கப்பட்டது. அப்படியிருந்தும் அத்தினத்தில் அதுபற்றிப் பேசாமலே அக்கடிதத்தை ஸர். பி. தியாகராஜ செட்டியாருக்கும், பி. வி. துரைசாமி முதலியாருக்கும் அனுப்பி அவர்கள் மூலமாய் விசாரித்தல் வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது. அதன் பின் அக்கடிதத்தை காரியதரிசியாகிய ஐயர் அவ்விருவரிடம் அனுப்பியிருத்தல் வேண்டுமென்று பலநாள் எதிர்பார்த்தும் கடைசியாக அவ்விருவரும் தங்களுக்கு அக்கடிதம் சேரவில்லையென்று தெரிவித்துவிட்டார்கள். ஐயர் அதை அவர்களுக்கு அனுப்பிவிட்டதாகத்

தெரிவித்து விட்டார். அதனால் ஆதிமூல முதலியார் அதன்பின் அவ்விருவருக்கும் தமது கடிதத்தின் பிரதி (Copy) ஒன்று எழுதியனுப்பினர். ஸர். பி. தியாகராஜ செட்டியார் 1917ஹு செப்டம்பர்மீ 9உ ஆதிமூல முதலியாரையும் சண்முக முதலியாரையும் தம்மிடம் வருவித்து, கடிதத்தைச் சண்முக முதலியாரிடம் கொடுத்து, ஒருவாரத்திற்குள் அவருடைய மறுமொழியை எழுதி, தம்மிடம் கொண்டுவந்து கொடுக்கும்படி சொன்னர். சண்முக முதலியார் அப்படிச் செய்வதற்குப் பயந்து, தம் மனம் போனபடியெல்லாம் பதில் எழுதி அக்கடிதத்தையும் தமது மறுமொழியையும் தமக்குச் சார்பாயிருக்கும் கமிட்டி காரியதரிசியிடம் கொண்டுபோய் கொடுத்தார். அக்காரியதரிசி அம்மறு மொழியை ஸர். பி. தியாகராஜ செட்டியாருக்கு அனுப்பிவிடல் வேண்டும். அப்படி அனுப்பாமல் பின்வருமாறு கடிதம் எழுதி ஆதிமூல முதலியாருக்கு 1917ஹு டிசம்பர்மீ 15உ அனுப்பினர்.

To, M. R. Ry., AUTHIMOOLA MUDALIAR,
Trustee of Sri Karpaga Vinayagar Temple,
Madras.

SIR,

I herewith forward to you for your remarks the reply of Mr. A. C. Shunmuga Mudaliar Avl., your Co-trustee which you are requested to submit at an early date. On the receipt of your reply the matter will be placed before the meeting for disposal.

Yours sincerely,
(Sd.) R. SUBRAMANIA IYER,
Secretary.

ஆதிமூல முதலியார் காரியதரிசி விரும்பியவாறே பதில் எழுதி 1918ஹு ஜனவரிமீ 9உ கடிதங்களை அவருக்கே திருப்பி அனுப்பினர்.

கமிட்டி காரியதரிசி தாம் முன் எழுதித் தெரிவித்தவாறு அக்கடிதங்களை கமிட்டியின் முன்பு வைத்து விசாரணை செய்விக்க மனமில்லாமல், ஆதிமூல முதலியாருக்கு 1918ஹு மார்ச்மீ 9உ பின்வருமாறு போஸ்ட் கார்ட் எழுதினர்.

Sir, Please go over to Mylapore to-morrow evening. I will try to settle disputes between you both. The matter has long been pending.

Yours very sincerely,
R. SUBRAMANIA IYER,
Secretary.

கமிட்டி காரியதரிசி தெரிவித்தவாறே மைலாப்பூரிலுள்ள அவர் வீட்டிற்கு அவர் குறித்த காலத்தில் ஆதிமூல முதலியார் சென்ருர். ஐயர் இவரிடம் நெடுங்காலம் வேறு விஷயங்களைப்பேசிக் காலங்கழித்துக் கொண்டிருந்து, கடைசியில் அணைவை சண்முக முதலியார் அன்று காலையில் தம்மிடம்வந்து போய்விட்டாரென்றும், இவர்களிருவரும் சச்சரவு செய்துகொண்டிருந்தால் அதை நிவர்த்திசெய்யத் தம்மாலாகாதென்றும் சொல்லிவிட்டார். இவ்வாறு பல நாட்களாக ஆதிமூல முதலியார் தேவஸ்தான கமிட்டியாரிடத்தில் மதிப்புவைத்து அலைந்ததும், ஸர். பி. தியாகராஜ செட்டியார், திவான் பஹதூர் இராஜரத்தின முதலியார், ராவ் சாஹிப் பி. வி. துரைசாமி முதலியார் முதலிய பிராமணரல்லாதவர்கள் பேச்சில் மதிப்புவைத்து தேவஸ்தான கமிட்டிக்கு விண்ணப்பஞ் செய்துகொண்டதும், வைதிக பிராமணராகிய பிரமஸ்ரீ R. சுப்பிரமணிய ஐயர் B.A., B.L., சூழ்ச்சியால் பயன்படா தொழிந்தன. சண்முக முதலியார் தம் இஷ்டப்படியே எதையும் செய்து கோயிலைப் பாழாக்கினர். கோயிற் சொத்துக்கள் பலவும், முக்கியமான தஸ்தாவேசுகளும் இவர்வசமிருந்து காணுதொழிந்தன. சண்முக முதலியார் ஒருவரே கையொப்பமிட்டுத் தேவஸ்தான கமிட்டிக்கு வருடாந்தக் கணக்கு அனுப்பிக் கொண்டிருந்தார். ஆதிமூல முதலியாரும் சண்முக முதலியாரும் கோயில் ட்ரஸ்டிகளா யிருக்கவேண்டிய காலமும் 1921 வருடம் பிப்ரவரி மாதத்தோடு முடிந்தது.

அணைவை சண்முக முதலியார் பலகாலமாக வயோதிகத்தாலும், நோயாலும் பீடிக்கப்பட்டுப் பாயும் படுக்கையுமா யிருப்பதனுல், மூன்று வது ஐந்து வருடங்களுக்கு ஆதிமூல முதலியாரோடு வேருெருவரை நியமிக்குமாறு கோயில் அபிமானிகள் தேவஸ்தான கமிட்டிக்கு விண்ணப்பஞ் செய்தார்கள். அவ்விண்ணப்பமும் பயன்படவில்லை. சண்முக முதலியாரின் நெருங்கிய பந்துவாகிய அணைவை நாகேசரலிங்க முதலியாரையும், சிநேகிதராகிய மாணிக்கவேலு முதலியாரையும் கமிட்டியார் கோயில் ட்ரஸ்டிகளாக நியமித்தார்கள். இவர்களிருவரும் கடவுளுக்

குப் பயந்து நடப்பவர்களா யிருப்பதனல், அணவை சண்முக முதலியார் செய்த அக்கிரமங்களுக்கு உடன்படாமல் காட்டூர் வெங்கடாசல முதலியார் மீது கோர்ட்டில் வழக்குத் தொடுத்திருக்கிறார்கள்.

இவ்வாறு ஆதிமூல முதலியார் சைவ சமயாபிமான மிகுதியால் பல வழிகளிலும் துன்பப்பட்டும் சலியாமல் பல காலமாகத் தம்மா லியன்ற வழிகளிலெல்லாம் சைவ சமய பரிபாலனம் செய்து கொண்டிருக்கிறார். சென்னையில் சைவ உயர்தரப் பாடசாலை தாபிக்கவிரும்பித் தமது குடும்பப் பாதுகாப்பின் பொருட்டுள்ள சொத்துக்களை அடமானம் வைத்து திருக்கூட்டத்திற்குக் கடன்கொடுத்து அரசாங்கத்தார் மூலமாக நிலம் வாங்குவித்திருக்கிறார்.

சைவ சமயிகள் ஒவ்வொருவரும் சென்னைச் சிவனடியார் திருக்கூட்டத்திற் சேர்ந்து தங்கள் சமயத்தைப் பரிபாலித்துவருதல் வேண்டுமென்று பெருமுயற்சி செய்து கொண்டிருக்கிறார். சுபம்.

## ஸ்ரீ கற்பக விநாயகராலய வியாச்சியத்தில் ஹைகோர்ட்டார் செய்த தீர்ப்பு.

## IN THE HIGH COURT OF JUDICATURE AT MADRAS.

ORDINARY ORIGINAL CIVIL JURISDICTION.

Tuesday, the 13th day of September 1910.

THE HONOURABLE MR. JUSTICE WALLIS.

No. 293 of 1909.

Between

1. I. Authimoola Mudaliar
2. A. C. Shunmuga Mudaliar

} ......Plaintiffs.

and

1. E. Vinayagasundaram by his mother and Guardian Ammakannu Ammall.
2. Velu Pillai

} ......Defendants.

Claim for a declaration that the 1st plaintiff as Secretary of the Chennai Sivanadiar Thirukoottam is the Dharmakartha of Karpaga Vinayagar Temple in the plaint herein mentioned; and the defendants have no manner of right to the said temple; for delivery of

possession of the said temple and its properties described in the plaint schedules herein; in the alternative for a suitable scheme of management of the said temple, and for costs.

This suit coming on this day on reference in the presence of Mr. C. P. Ramaswami Aiyar, Vakil for the Plaintiffs and of Mr. C. Venkatasubbaramiah, Vakil for T. Velu Pillai, the 2nd defendant herein and E. Vinayagasundaram, the 1st defendant herein, not appearing in person or by pleader, and upon reading the orders made herein and respectively dated the 30th day of March 1910 and 17th day of August 1910, the draft scheme of the plaintiffs filed on the 17th day of August 1910 and the objections of the 2nd defendant to the said scheme filed herein on the 30th day of August 1910, this Court being of opinion that it will be better to place both the appointments in the hands of the Devasthanam Committee who will no doubt pay due regard to the wishes of prominent worshippers such as the members of the society and that the society should pay a monthly rent of annas eight (as. 8.) to the temple for the premises it is permitted to occupy and that the paragraphs 5 and 6 of the said report be expunged, It is ordered and decreed as follows:—

1. That the said scheme for the management of the temple of Karpaga Vinayagar in the plaint herein mentioned as varied as aforesaid, be confirmed;

2. That the management of the said temple be vested in two trustees;

3. That the said two trustees shall be nominated by the Madras Devasthanam Committee as and when vacancies arise;

4. That the said trustees thus nominated shall hold office for five years; but shall on the expiry of the said period be eligible for re-nomination;

5. That the whole of premises No 1, Mulla Sahib Lane known as "The Chennai Sivanadiar Thirukootta Sabha Mantapam" shall be declared to be the property of the said temple, but the Chennai Sivanadiar Thirukoottam shall be entitled to occupy the same so long as it is in existence on payment of monthly rent of annas eight (as 8) to the said temple for the first floor of the said premises;

6 That the Jewels and other properties of the said temple and the title deeds of the said temple shall be in the joint custody of the said two trustees;

7. That an account of receipts and expenses and a list of the temple properties moveable and immoveable shall be kept by the said trustees, and that an annual statement of accounts and report of the management of the said temple shall be printed and published in an English and Tamil newspaper and circulated in Madras and a copy shall be sent to the Madras Devasthanam Committee every year before the 30th April;

8. That the Archakas and servants of the said temple shall be appointed by and be under the control of the said trustees;

9. That all licenses shall be obtained in the Joint names of the said two trustees;

10. That any worshipper sball be entitled to inspection of the account books of the said temple on giving two days' notice;

11. That the said trustees shall be at liberty to apply to this Court for modification of this scheme and for directions in carrying out of this scheme;

12. That the costs of all parties of this suit when taxed and noted in the margin here of shall be paid from and out of the estate of the said temple.

(Sd) C. SIDNEY SMITH,

10—10—10. Ag Dy. Registrar.

ஆதிமூல முதலியார் திருக்கூட்டச் சகிதமாகச் சென்று சிவாலய வழிபாடாதிகள் செய்த தலங்களும் தினங்களும் :—

| தலம். | தமிழ் தேதி. | | இங்கிலீஷ் தேதி. |
|---|---|---|---|
| | **விளம்பி௵** | | |
| திருவொற்றியூர் | மார்கழி | 11-12 | (24, 25-12-98) |
| திருமுல்லைவாயில் | தை | 17 | (29-1-99) |
| திருவலிதாயம் | மாசி | 23 | (5-3-99) |
| திருவூறல் | பங்குனி | 19 | (31-3-99) |
| | **விகாரி௵** | | |
| திருக்கழுக்குன்றம் | சித்திரை | 11-12 | (22, 23-4-99) |
| திருவிற்கோலம் | வைகாசி | 15,16 | (27, 28-5-99) |
| திருமாற்பேறு | ஆனி | 11,12 | (24, 25-6-99) |
| திருவேற்காடு | ஆடி | 15,16 | (29, 30-7-99) |
| செங்கற்பட்டு ஸ்ரீ ஏகாம்பரநாதர் திருக்கோயில் | ஆவணி | 12 | (26-8-99) |
| திரு இடைச்சுரம் | ,, | 13 | (27-8-99) |
| திருக்கள்ளில் | புரட்டாசி | 3 | (17-9-99) |
| திரு அச்சிறுபாக்கம் | ஐப்பசி | 6,7 | (21, 22-10-99) |
| திருக்கச்சூராலக்கோயில் | கார்த்திகை | 11,12 | (25, 26-11-99) |
| புதுவை ஸ்ரீ வேதகிரீசுவரர் திருக்கோயில் | மார்கழி | 10 | (24-12-99) |
| திரு அரசிலி | ,, | 11 | (25-12-99) |
| திரு இரும்பை மாகாளம் | ,, | 11 | (25-12-99) |
| திருவக்கரை | ,, | 12 | (26-12-99) |
| மைலம் | ,, | 12 | ,, |
| திருப்பாசூர் | தை | 15,16 | (27, 28-1-00) |
| திருமாகறல் | மாசி | 8 | (18-2-00) |
| திருவெண்பாக்கம் | பங்குனி | 6 | (18-3-00) |
| | **சார்வரி௵** | | |
| திருக்காமக்கோட்டம் | சித்திரை | 1 | (13-4-00) |
| திருஓணகாந்தன்றளி | ,, | 2 | (14-4-00) |
| திருவேகம்பம் | ,, | 2 | ,, |
| திருக்கச்சியனேகதங்காவதம் | ,, | 2 | ,, |
| திருக்கச்சபேசுரம் | ,, | 3 | (15-4-00) |
| குமரகோட்டம் | ,, | 3 | ,, |

| தலம். | தமிழ் தேதி. | | இங்கிலீஷ்தேதி. |
|---|---|---|---|
| திருக்கச்சிநெறி காரைக்காடு | சித்திரை | 4 | (16-4-00) |
| திருமேற்றளி | ,, | 4 | ,, |
| திருக்கச்சிமயானம் | ,, | 4 | ,, |
| ஸ்ரீ கைலாய நாதர் திருக்கோயில் (காஞ்சி) | ,, | 4 | ,, |
| திரு இலம்பையங் கோட்டூர் | ,, | 31 | (13-5-00) |
| திருவாலங்காடு | ஆனி | 4 | (17-6-00) |
| திருவல்லம் | ஆடி | 1 | (15-7-00) |
| திருக்காளத்தி | ,, | 29 | (12-8-00) |
| திருவான்மியூர் | ஆவணி | 24,25 | (8, 9-9-00) |
| திருமயிலை | கார்த்திகை | 4 | (18-11-00) |
| திருவோத்தூர் | மார்கழி | 10 | (24-12-00) |
| திருக்குரங்கணின்முட்டம் | ,, | 11 | (25-12-00) |
| திருவன்பார்த்தான் பனங்காட்டூர் | ,, | 11 | (25-12-00) |
| திரு அகத்தீச்சுரம்(கொண்ணூர்) | மாசி | 12,13 | (23, 24-2-01) |
| திரு அறையணி நல்லூர் | பங்குனி | 24 | (5-4-01) |
| திருக்கோவல் வீரட்டம் | ,, | ,, | ,, |
| திரு அண்ணாமலை | ,, | 24,25 | (5, 6-4-01) |
| திருவிரிஞ்சிபுரம் | ,, | 26 | (7-4-01) |

பிலவ வருடம்

| | | | |
|---|---|---|---|
| திரு நாகேச்சுரம் | வைகாசி | 13 | (26-5-01) |
| குன்றத்தூர் | ,, | ,, | ,, |
| நத்தம் | ,, | ,, | ,, |
| கோவூர் | ,, | ,, | ,, |
| திருமின்றவூர் | ஆனி | 9,10 | (22, 23-6-01) |
| திருமழிசை | ஆடி | 6,7 | (20, 21-7-01) |
| பொன்னேரி | ஆவணி | 16 | (1-9-01) |
| திருப்பாலைவனம் | ,, | 17 | (2-9-01) |
| மல்லிகேச்சுரம் (திருமயிலை) | ஐப்பசி | 11 | (27-10-01) |
| சிதம்பரம் | மார்கழி | 11,12 | (25, 26-12-01) |
| திருவேட்களம் | ,, | 11 | (25-12-01) |
| திருக்கழிப்பாலை | ,, | ,, | ,, |
| திருநெல்வாயில் (சிவபுரி) | ,, | ,, | ,, |
| சீகாழி | ,, | 13 | (27-12-01) |
| திருக்கோலக்கா | ,, | ,, | ,, |
| புள்ளிருக்குவேளூர் | ,, | ,, | ,, |

| தலம். | தமிழ் தேதி. | இங்கிலீஷ்தேதி. |
|---|---|---|
| திருமயிலாடுதுறை | மார்கழி 14 | (28-12-01) |
| திருவாரூர் | ,, ,, | ,, |
| திருவாரூர் அரநெறி | ,, ,, | ,, |
| திருப்பாதிரிப்புலியூர் | ,, 15 | (29-12-01) |
| திருவதிகை வீரட்டானம் | ,, 15,16 | (29, 30-12-01) |
| திருப்போரூர் | பங்குனி 15 | (28-3-02) |

சுபகிருதுவருஷ

| | | |
|---|---|---|
| காரணீச்சுரம் (சைதாப்பேட்) | சித்திரை 7,8 | (19, 20-4-02) |
| குளத்தூர் | வைகாசி 19 | (1-6-02) |
| ஆண்டார் குப்பம் | ஆடி 5 | (20-7-02) |
| மாடம்பாக்கம் | புரட்டாசி 6 | (21-9-02) |
| அபிமுத்தேச்சுரம் | மார்கழி 11 | (25-12-02) |
| குடந்தைக்காரோணம் | ,, ,, | ,, |
| குடந்தைக்கீழ்க்கோட்டம் | ,, ,, | ,, |
| வியாழச்சுவாமிநாதர் திருக்கோயில் | ,, | ,, |
| திருக்குடமூக்கு (கும்பகோணம்) | ,, 11,12 | (25, 26-12-02) |
| கொட்டையூர் | ,, 11 | (25-12-02) |
| திருவேரகம் | ,, ,, | ,, |
| திருவலஞ்சுழி | ,, 12 | (26-12-02) |
| திருச்சத்திமுற்றம் | ,, ,, | ,, |
| திருப்பட்டீச்சுரம் | ,, ,, | ,, |
| முழையூர் | ,, ,, | ,, |
| திருவடதளி | ,, ,, | ,, |
| திருவிடைமருதூர் | ,, 13 | (27-12-02) |
| திருபுவனம் | ,, ,, | ,, |
| திருவையாறு | ,, 13,14 | (27, 28-12-02) |
| திருப்பழனம் | ,, 14 | (28-12-02) |
| திங்களூர் | ,, ,, | ,, |
| திருநெய்த்தானம் | ,, ,, | ,, |
| திருக்கண்டியூர் | ,, ,, | ,, |
| தஞ்சைராஜராஜேசுவரம் | ,, ,, | ,, |
| காஞ்சிபுரம் | பங்குனி 28 | (10-4-03) |

சோபகிருதுவருஷ

| | | |
|---|---|---|
| திருமயிலை | சித்திரை 24 | (6-5-03) |
| திருவேற்காடு | ,, 27 | (9-5-03) |
| சோழம்பேடு | வைகாசி 24 | (6-6-03) |

| தலம். | தமிழ் தேதி. | இங்கிலீஷ்தேதி. |
| --- | --- | --- |
| திருமுல்லைவாயில் மேலூர், திருவொற்றியூர் | வைகாசி 25 | (7-1-03) |
| திருமுல்லைவாயில் | ஆனி 12 | (26-6-03) |
| திருத்தணிகை | ஆடி 25 | (9-8-03) |
| திருவேட்டீச்சுரம் | ஐப்பசி 2 | (18-10-03) |
| கோயம்பேடு | மார்கழி 12 | (27-12-03) |
| ஞாயிறு | தை 25 | (7-2-04) |
| திருவாரூர் | பங்குனி 19,20 | ((31-3-04, 1-4-04) |
| அரநெறி | ,, ,, | ,, |
| பரவையுண்மண்டளி | ,, ,, | ,, |
| திருநாகைக்காரோணம் | ,, 20 | (1-4-04) |
| திருக்கீழ்வேளூர் | ,, 21 | (2-4-04) |
| திருமறைக்காடு (வேதாரணியம்) | ,, 22 | (3-4-04) |
| திரு அகத்தியான்பள்ளி | ,, ,, | ,, |
| திருப்பெருந்துறை | ,, 23 | (4-4-04) |
| திருநெல்லிக்கா திருக்கொள்ளிக்காடு திருத்தெங்கூர் திருநாட்டியத்தான்குடி சிதம்பரம் | ,, 24, 25, 26 | (5, 6, 7-4-04) |

குரோதிஞ

| | | |
| --- | --- | --- |
| திருவலிதாயம் | வைகாசி 24 | (3-6-04) |
| வடதிருமுல்லைவாயில் | ஆடி 17 | (31-7-04) |
| திருநாகேச்சுரம் | புரட்டாசி ,, | (25-9-04) |
| குன்றத்தூர் | ,, ,, | ,, |
| திருக்கழுக்குன்றம் | மார்கழி 11 | (25-12-04) |
| திருக்காளத்தி | மாசி 21,22 | (4, 5-3-05) |

விசுவாவசு

| | | |
| --- | --- | --- |
| சைதாப்பேட்டை | சித்திரை 2 | (14-4-05) |
| திருவேற்காடு | ,, 6 | (18-4-05) |
| திருவச்சிறுபாக்கம் திரு இடைச்சுரம் திருக்கச்சூராலக்கோயில் செங்கல்பட்டு வேதகிரீச்சுரம் | ,, 9,10,11 | (21, 22, 23-4-05) |
| திரு முருகன்பூண்டி | ஆடி 13 | (28-7-05 |

| தலம். | தமிழ் தேதி. | இங்கிலீஷ் தேதி. |
|---|---|---|
| அவிநாசி | ஆடி 13 | ,, |
| திருப்பாண்டிக்கொடுமுடி | ,, 14 | (29-7-05) |
| திருநணு | ,, ,, | ,, |
| திருச்செங்கோடு | ,, 15 | (30-7-05) |
| சேலம் | ,, 16 | (31-7-05) |

இதன் பின் ஆதிமூல முதலியார் கல்கத்தாவில் சில காலம் வசித்திருந்தார்.

கீலக வருஷம்

| | | |
|---|---|---|
| திருவிற்கோலம் | தை 26 | (7-2-09) |
| திரு இலம்பையங்கோட்டூர் | ,, ,, | ,, |

சௌமிய வருஷம்

| | | |
|---|---|---|
| திருமயிலை கபாலீச்சுரம் | சித்திரை 5,6 | (17, 18-4-09) |
| ,, தீர்த்தபாலீச்சுரம் | | |
| ,, காரணீச்சுரம் | | |
| ,, மல்லிகேச்சுரம் | | |
| ,, வாலீச்சுரம் | | |
| ,, வெள்ளீச்சுரம் | | |
| ,, விருபாட்சீச்சுரம் | | |
| திருவலிதாயம் | சித்திரை 19 | (1-5-09) |
| திருவேற்காடு | சித்திரை 21 | (3-5-09) |
| திருப்பாசூர் | ஆனி 14 | (27-9-09) |
| குன்றத்தூர் | ,, 20 | (3-7-09) |
| நத்தம் | ,, 21 | (4-7-09) |
| திருநாகேச்சுரம் | ,, 21 | ,, |
| திருமயிலை | ஆவணி 13 | (28-8-09) |
| திருவொற்றியூர் | புரட்டாசி 11 | (26-9-09 |
| திருவருகத்துறை | ஐப்பசி 22 | (7-11-09) |
| திருவாலங்காடு | மார்கழி 12,13 | (26, 27-12-09) |

சாதாரண வருஷம்

| | | |
|---|---|---|
| திரு இடைச்சுரம் | ஆவணி 5 | (21-8-10) |
| திருத்தணிகை | தை 25 | (7-2-11) |

விரோதிகிருது வருஷம்

| | | |
|---|---|---|
| சிதம்பரம் | சித்திரை 20 | (2-5-11) |

| தலம். | தமிழ்தேதி. | இங்கிலீஷ் தேதி. |
|---|---|---|
| விருத்தாசலம் | சித்திரை 22 | (4-5-11) |
| திருவேகம்பம் | மார்கழி 16, 17, 18 | (31-12-11, 1, 2-1-12) |
| திருக்கச்சிமேற்றளி | | |
| திருக்கச்சிமயானம் | | |
| அனேக தங்காவதம் | | |
| ஓணகாந்தன்றளி | | |
| காமக்கோட்டம் | | |
| குமாரக்கோட்டம் | | |
| திருவூறல் | பங்குனி 25 | (6-4-12) |

பரிதாபி௵

| | | |
|---|---|---|
| அணவை | சித்திரை 2 | (4-5-12) |
| திரிசூலம் | ஆவணி 30 | (14-9-13) |

இவையன்றியும் சென்னை நகரைச் சார்ந்த பல திருக்கோயில்களில் பல முறையும் மகோற்சவ தரிசனமும் திருக்கோயில் வழிபாடும் செய்யப்பட்டன.

## சைவத்திருவாளர்காள்

உங்கள் உத்தமோத்தமச் சைவ நல்லொழுக்கங்கள் உலகில் நிலைத்து நிற்கவேண்டுமாயின் சென்னைச் சிவனடியார் திருக்கூட்டத்தில் விரைந்து சென்று சேர்மின். சைவப் பத்திரிகையை அபிவிருத்தி செய்மின். இயல்வது கரவன்மின்.

## திருப்பல்லாண்டு

மிண்டு மனத்தவர் போமின்கள் மெய்யடி யார்கள் விரைந்துவம்மின்
கொண்டுங் கொடுத்துங் குடிகுடி யீசற் காட்செய்மின் குழாம்புகுந்து
அண்டங் கடந்தபொரு ளளவில்லதோ ரானந்த வெள்ளப் பொருள்
பண்டுமின்று மென்றுமுள்ள பொருளென்றே பல்லாண்டு கூறுதுமே.

திருச்சிற்றம்பலம்.